தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

" போற்றுபவர்போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் ! "

ஆண்டு சந்தா ரூ. 6—0—0

6 மாதச் சந்தா ரூ. 3—0—0

ள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 1 | சென்னை | 28—5—55 | சனிக்கிழமை | இதழ் 48

பகலும் இரவும்

நா. பாண்டுரங்கன், எம்.ஏ.

றைக்கண்ணுள்ள பகலே! ஓரா யிரம் கண்ணுள்ள இரவே! கள் இருவரும் இந்த உலகத்தை ண்டு பெண்டாட்டிக்காரன் திண் ட்டத்தில் கொண்டுவந்துவிட்டீர் . பகல் ஒரு தோளைப் பற்றி ழக்க, இரவு இன்னொரு தோளைப் றி இழுக்க இடையில் அகப் டுக்கொண்ட உலகம் செய்வதறி து சுற்றுகிறது!

தீப்பற்றிக்கொண்ட கிழக்கு- ளத்திலிருந்து கதிரவனை விடு த்துக்கொண்டு கிளம்பும் பகலே! ன் பாதச்சிலம்புகள் பூபாளம் டுகின்றன.

கிழக்கே சந்தனக் குளத்தில் சலடித்துக்கொண்டிருக்கும் லவை அழைத்துக்கொண்டு புறப் ம் இரவே! உன் காற்சிலம்புகள் ாம்பரி பாடுகின்றன.

கூட்டிலிருக்கும் காக்கையைக் ல் கிளப்ப வைக்கும் பகலே! கீழாகத் தொங்கும் பழந் னும் வௌவாலைத் தட்டிக் ப்பும் இரவே! உங்கள் இரு ன் செயல்களையும் கவிஞனின் னை தொட்டால்....

கல் பாயைச் சுருட்டுகிறது:
இரவு படுக்கையை விரிக்கிறது.
கல், வேலைக்குப் போகிறது; மையைச் செய்ய! இரவு சோலைக் போகிறது, காதல் புரிய! ல் வானஅரங்கில் வெள்ளித் ரையை விரித்துவிடுகிறது! இரவு தத் திரையை நீக்கிவிடுகிறது - ாரி நிலா நடனக்குழுவினரின் ட நடனத்தைத் துவக்கிவிடு து!

பகல் கனைக்கும் பேய்! தொழி ளி அதைக் கண்டு பயந்து நடுங்கு றன்; அலறி அழுகிறான்; துடித் த் துவளுகிறான்.

இரவு அணைக்கும் தாய்! தொழி ளி துள்ளி ஓடும் மானைப்போல் ன்று அதன் தோள்களில் சாய ன்; அவன் களைப்பு ஒய்கிறது; லை தேய்கிறது.

பகல் குதித்து வரும் அலைகளைப் ல் இரைச்சலிடுகிறது.

இரவு புல்லாங்குழலில் புகுந்து ல்லும் காற்றைப்போல் இசை கிறது-

கல் தொழிற்கூடம்.

இரவு கலைமாடம்.

கல் கார்மேகங்களைப்பெற்றெடுக் து.

இரவு முத்துக்கடை வைத்திருக் து.

கலின் திறந்த கண்களில் ரைகள் சிரிக்கின்றன!

இரவின் மூடிய விழிகளில் ஆம்பல் மொட்டுக்கள் கட்டவிழ் கின்றன!

பகலின் தாய்தந்தை கதிரவன்!

இரவின் செல்லப்பிள்ளை வெள்ளி நிலவு!

மாந்தரின் கருவிழிகளில் சுடர் ஏற்றி அவர்தம் கண்களுக்கு வாழ்வுதரும் ஒளி உருவமான பகலே!—பூனையின் பச்சை விழி களுக்குப் புத்தொளிதந்து, பறக் கும் மின்மினிகளின் உடல்ஒளியைப் பற்றவைக்கும் கருப்பு நிற இரவே! நீங்கள் இருவரும் தங்கியிருக்கும் இடங்களையெல்லாம் சற்று சிந்தித் துப் பார்த்தால்......

பல்லுப்போன பாட்டியின் கூந்த லில் தங்கிப் பல்லைக் காட்டுகிறது பகல்!

வில்லைப்போன்ற புருவமுள்ள எழில் வல்லியின் கூந்தலில் வீற் றிருக்கிறது இரவு!

ஏழையின் வீட்டில் எரியும் 'சிமினிவிளக்கின்' சுடரில் சிரிக் கிறது பகல்!

அப்படிச் சிரிக் கும் சுடர் வெளி யே கக்கும் புகை யில் திகைக்கிறது இரவு!

நீரில்லாது வறண்டு தாகத்தால் தவித்துத் தவழ்ந்துகொண்டிருக் கும் மேகத்தில் தங்கியிருக்கிறது பகல்.

நீர் நிறையக் குடித்து நிலை தடு மாறிச்செல்லும் மேகத்தில் நிறைந் திருக்கிறது இரவு!

உழைப்பவர்களின் வாழ்வில் அழைக்காமலே வந்து அமர்ந்து விடுகிறது இரவு!

அப்படி உழைப்பவர்களின் பலனால் தழைப்பவர்களின் வாழ் வில் தாண்டவமாடுகிறது பகல்!

கட்டழகியின் கூந்தல் அழகு பட்டுத்தெறிக்கும் கார் இரவே! நீ ஓசை படாமல் நடக்கும் பூனையைக் கண்டால் ஓடி ஒளிந்துவிடும் எலி யைப்போல, புத்தொளி வரக் கண் டால் சத்தமிடாது மறைந்துவிடு கிறாய் என்று சொல்லுகிறார்கள். இது எத்துணைப் பெரிய தவறு! நிலத்தில் உடலைவளைத்துப் படுத்துக் கிடக்கும் நீண்ட ஆறுதான் நீ! அதில் பெருகும் வெள்ளம்தான் ஒளி-ஒளி உருவமான பகல்! ஓடு வது ஆறு? அல்ல அல்ல-நீர்தான்.

இந்த உலகம் மட்டுமல்ல, எந்த உலகமும் எங்கும் தோன்றாத காலத்திலிருந்தே பரந்த வெளி முழுதும் நிறைந்திருக்கும் நிலைத்த இரவே! நீ, மனித வாழ்வில் மலரும் ஒவ்வொரு நாளிலும் பாதி நேரம் வரை பாராளுகிறாய்! உன் ஆட்சியில் தோன்றும் காட்சிகளை எண்ணினால்......

ஒன்றுபட்ட உள்ளங்கள் என் பதை எடுத்துக் காட்டிக்கொண் டிருக்கின்றன ஒன்றுபட்ட உடல் கள்!......

விட்டுப் பிரிந்த காதல் இதயங் கள்-அதனால் விழிகளில் தொட்டுப் பிரிந்து தொடர்ந்து, தொட்டுப் பிரிந்து விளையா டிக்கொண் டிருக் கின்றன இமை கள்!......

கசங்கி நசுங்கிக்கொண்டிருக்கின் றன விலை மாதர் வீட்டுப் பஞ்சணை கள்-அவை தம்மை யறியாமலே, கணவன்மார்களை எண்ணி எதிர் பார்க்கும்மனைவிமார்களின்உள்ளங் களைக் கசக்கி நசுக்கிக்கொண்டிருக் கின்றன-அதனால் அவர்களின் விழி களில் பெருகிக்கொண்டிருக்கின் றன கண்ணீர் வெள்ளங்கள்!......

மனித உடற்கூண்டில் வாழும் உயிர்க்கிளியை எப்படியோ பிடித்து கவ்விக் கடித்துத் தற்கொலைப் பூனை தின்றுகொண்டிருக்கிறது!...

தன்னுடைய உடைமையை மட்டு மல்ல தன்னையும் மறந்து தூங்கும் உரியவனின் வீட்டில், தன்னையும் தன்னைச் சுற்றியும் தன்னுடைய செயலையும் நினைத்த வண்ணம், பதுங்கித் தயங்கிப் பயந்து பாய்ந்து கள்ளன் நடந்துகொண்டிருக் கிறான்!......

ரோஜா நிற வெல்வெட் தலையணை யில் ஆப்பிள் கன்னங்களை வைத்து அழுத்தியவாறு படுத்திருக்கும் மாந்தளிர் மேனியாளின் அருகி லிருந்து எழுந்து அமர்ந்து புதிய சுறுசுறுப்பைப் பெற புன்கையுடன் பூப்பொறித்த கண்ணாடிக் கிண்ணத் தில் அந்திவான நிறம் மின்னும் பானத்தை ஊற்றிக்கொண்டிருக் கிறான் மாளிகை மன்னன்!......

புத்தறிவிலும், நாட்டில் பூக்கச் செய்யும் புது வாழ்விலும் இத யத்தை இழந்துவிட்ட நல்லவர் களின் விழிகளில், நகர்ந்து கொண்டிருக்கும் நேரம் சிவப்பு வண்ணத்தை மெல்ல மெல்ல பூசிக் கொண்டிருக்கிறது.

அச்சத்தைத் தரும் அமைதி நிறைந்த இரவே! உன் பயங்கரத் தைக் கண்டுதான் மின்மினிகள் துடிக்கின்றன; சிள்வண்டுகள் அழு கின்றன; ஆந்தைகள் அலறு கின்றன; விட்டுவிட்டு நாய்கள் குரைக்கின்றன! ஆனால் இரவு மங்கையே! உன்னுடைய மடியிலே தான் ஒவ்வொரு நாளும் நடன நாடக திரைப்படக் குழந்தைகள் தவழ்கின்றன! சிந்தனைக்கு விருந் தூட்டும் இரவே! உன் ஆட்சியின் முற்பகுதியில் கலைகளை அரங்கிலே நடமாட வைக்கிறாய் - பிற்பகுதி யிலோ மரண தண்டனை விதிக்கப் பட்ட கைதிகளைத் தூக்குமேடைகளி லே கொண்டுவந்து நிறுத்தித் துடி துடிக்க வைக்கிறாய்! முதலில் கலை வளர்க்கும் நீயே முடிவில் கொலை வளர்க்கிறாயே, உன்செயல் மனத் திலே புயல் எழுப்புகிறது! பலர் அறியும் அறம்செய்யும் பகலே! பலர் அறியாப் பாவம் புரியும் இரவே! உங்கள் இருவரின் வேறு பட்ட நிலைகளை நினைத்தால்......

பகல் மலர்ந்துவரும் பகுத்தறிவு!

இரவு மண்டிக்கிடந்து மங்கும் அறியாமை!

உயிரினங்களையெல்லாம் ஆட்டிப் படைக்கும் பகலே! இரவே! உ களைத்துளிக்கூட மதிக்காத ஓர் இ மும் உலகில் வாழ்ந்துகொண் தான் வருகிறது-அந்த இனம் விக்குருடர்கள்!

எல்லைக்கப்பால் !

உலக அரங்கில் எந்த நாட்டின் எல்லைக்குள்ளாவது ஓசை சற்று அதிகமாக ஒலித்தால் மற்ற நாடுகள் அச்சத்தோடு, ஐயத்தோடு நோக்குகின்ற காலமிது. பீரங்கி முழக்கத்தையும், 'டுமீல்' சத்தத்தையும் வெறிக்குணத்திற்கு உணவாக்கிய காலம் போய், வெண் புருக்களுக்கு வாழ்வு வேண்டுமானால், வேடர்கள் ஒழியவேண்டும் என்று திட்டவட்டமாக கருதியிருக்கிற காலம் இந்தக் காலம். ஆம் ; ஆதிக்கமோகம் கேலிக்குறியதாகி விட்டது. ஆணவப் பேச்சு அமைதி விரும்பிகளுக்கு நஞ்சாகிவிட்டது. இந்தநேரத்தில் வியட்நாம் நம் உள்ளத்திலே ஒரு கேள்விக் குறியை விதைக்கிறது.

இந்தோ சீனாவின் நிழலிலே உள்ள நாடுகளில் ஒன்று வியட்நாம். 'ஜெனிவா' முடிவுப்படி வடவியட்நாம் **ஹோசிமின்** பார்வையிலும், தென்வியட்நாம் **பாவ்டாய்** கண்காணிப்பில், தலைமை அமைச்சர் **தீம்** என்பாரின் கீழும் இருந்து இயங்கி வருகின்றன. ஆனால் தென் வியட்நாமில் அணிவகுப்பிலே ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. தென் வியட்நாமில், மத அரசியல் பற்றுள்ள **பின்சூவன்** குழுவினர் அதிகாரத்தை தீமிடமிருந்து கைப்பற்ற எண்ணினர்: இதனால் மதாபிமானிகளின் தனிப்பட்ட ராணுவத்திற்கும், தீமின் அரசாங்கப் படைக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இந்தச் சிறு மோதல் உள்நாட்டுப் போராக உருவெடுத்து விட்டது. இந்தத் தகராறை ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து கவனித்துக் கொண்டிருந்த பாவ்டாய்--தென் வியட்நாமின் மேலாளர், மதாபிமானிகள் படைக்கே வெற்றி கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பது கண்டு, மக்கள் மதாபிமானிகளை ஆதரிப்பதாக தப்புக் கணக்குப் போட்டுவிட்டார். படைபலம் குறைந்த கட்சி மக்களுக்கு விரோதமான கட்சி என்று முடிவு கட்டிவிட்டார். இதனால், பாவ்டாய் தன்னுடைய விசேட அதிகாரத்தை பிரயோகித்து, தீமுக்குத் தரப்பட்டிருந்த ராணுவ அதிகாரத்தை ரத்து செய்துவிட்டார். அதோடு, இருதரப்பாரையும் பிரான்சுக்கு வரும்படி பாவ்டாய் அழைத்திருந்தார். ஆனால் அழைப்பு தீமால் மறுக்கப்பட்டு விட்டது. எப்படியோ இந்தக் குழப்பம் தீர்ந்ததுபோலிருக்கிறது என்றாலும் இந்த வியட்நாம் தகராறில் அமெரிக்காவும், பிரான்சும் பங்கேற்றிருப்பதைப் பார்த்தால் புகை பெருந்தீயாகிவிடுமோ என்ற பயம் அரும்பு விடத்தான் செய்கிறது. தீம் என்பார் என்ன கருத்துடையவராக இருக்கிறார் என்பதை இன்றுவரை உறுதியாகக் கூறுவதற்கில்லை தான். 'சங்கர்ஸ் வீக்லி' என்ற ஆங்கில வார இதழ் தீமைப் பற்றிக் கூறும்போது,

"தென் வியட்நாம் பிரதமர் நிகோதின் தீம் தம் வாணாள் முழுதும் கம்யூனிஸ்டுகளுடன் போர் புரிந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் அமெரிக்கர் உள்ளங் கவர் செல்வராக விளங்கி வருகிறார். அதல்லாமல் வேறு நிலையிலிருக்கக் காரணமெதுவுமில்லை. அவர் ஒரு கத்தோலிக்கர் ; காந்தியை மதிப்பவர் ; ஒழுக்கத்திற்கு முதலிடமளித்து வாழும் வாலிபன்போல தோற்றமுடைய 54 வயது மனிதர். சுதந்திர அரண்மனையில் வசிக்கிறார். சாம்பல்நிறக் கோடிட்ட பைஜாமா அணிந்து கொண்டு அரண்மனையின் மூன்றாவது மாடியிலுள்ள சயன அறையில் உலாத்திக் கொண்டிருப்பதில் விருப்பங் கொண்டவர். வெறும் வியட்நாம் பிரபுவாகவோ அல்லது தேசியவாதியாகவோ இருந்திருக்கும்பட்சத்தில் உலகம் அவரைத் தெரிந்திருக்காது. பிரஞ்சுக்காரருடனும் அவர்தம் செல்லப்பிள்ளை ஜெனரல் லி வான் வீன் என்பாருடனும் சமர் புரிந்தவாறே இருக்கிறார். பாவோடாய் பிரஞ்சு நாட்டின் கைப்பொம்மை என்று கொண்டால், தாம் அமெரிக்காவின் கைப்பொம்மை அல்ல என்பதை உலகுக்கு அறிவிக்கும் பெருத்த முயற்சியிலீடுபட்டு வருகிறார் தீம.

இரண்டாவது உலகப் போரின் போது விசுவாசம் காட்டியமைக்காக பிரிட்டிஷார் தட்டிக்கொடுத்த வோங் கின பிங் என்பவரை விட சக்தி படைத்தவர் தீம்.

வெற்றி யாருக்கு தோல்வி யாருக்கு என்று தீர்ப்பளிக்க முடியாத வகையில் இதுவரை சைகோன் தெருக்களிலே நடத்தப்பட்ட சண்டைகள் வெறும் உபத்திரவம் தந்தனவே தவிர அவை வியட்நாமியரின் சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் அளிப்பனவாக இல்லை. ஜெனரல் காலின்ஸ் போன்ற தீமின் அமெரிக்க ஆலோசகர்கள் ஜெனிவா உடன்படிக்கையின்படி நடைபெற இருக்கிற தேர்தலை முன்னிட்டு தென்பகுதியைத் தம் பக்கம் திரட்ட அவா கொண்டுள்ளனர். தீம் பெயரளவில் அதிகாரம் செலுத்துவதாக உள்ள கிராமங்களில் பெரும்பான்மை யானவை ஹோ-சி-மின அவர்களுடைய சார்பில ஏற்கனவே உள்ளன. வடக்கிலிருந்து பரவி வருகின்ற கம்யூனிச வாடைக்கு மாற்றாக கல்லூரியிலே யிருந்து கண்டெடுக்கப்பட்ட காளை அமெரிக்காவால் சைகோனிலே வேரூன்றப் பட்டார். ஆனால் தென்பகுதிய நிபுணர்களும் டாலர்களும் சீர்படுத்துவர் என்ற அமெரிக்க கட்டுக்கதை அவரிடமுள்ள தயாள குணத்திற்கு உதவி புரிந்ததாயில்லை. ஜெனிவா விஷயத்தினால் பிரஞ்சுக்காரரை மன்னிக்காமல் விடுத்த அமெரிக்காவின் கண்களுக்கு பாவோடாயை விட பயனுள்ள சின்னமாக தீம் தோற்றமளிக்கிறார். தீம் நல்லவர்; பதட்டமில்லாதவர்; ஆலோசனைகளை ஏற்றுக் கொள்கிறவர். ஆனால் பிரஞ்சு காலனி ஏகாதிப்த்தியத்திலிருந்தும், சதியிலிருந்தும் மதப் பிரிவுகளின் கதம்பத்தினின்றும் என்ன அவரால் காப்பாற்ற முடிகிறதோ அதை அமெரிக்க சாகுபடிக்கு உபயோகப்படுத்த முடியாத நிலையிலிருக்கிறார். தென்கிழக்கு ஆசிய ஜனநாயகத்தின் நம்பிக்கைகள் எவ்வளவு காலத்துக்கு அவரை விற்க அமெரிக்கர்களால் முடிகிறதோ அது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விஷயம்.'' என்று குறிப்பிட்டிருந்தது.

இப்படிப்பட்ட தீம் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பாவ்டாய் சமர்ப்பித்திருக்கிற திட்டத்தை ஏற்க மறுத்ததில் விந்தை இல்லைதான். ஆனால் இந்த இரு சாராரும், ஜனநாயகம் என்று பேசப்படுகிற 'பொதுத் தேர்தல்' என்ற பேச்சு பற்றியே எடுக்காமல் ஊமையாக இருப்பதைப் பார்த்தால், ஏதோ ஒரு 'பலவீனம்' இருப்பது நன்கு புலப்படுகிறது. எது எப்படியானாலும் வியட்நாம் புகை அணைக்கப்படவேண்டும். 'பெட்ரோலை' ஒளித்துவைத்திருப்போர் எவராயினும் அவர் திருத்தப்படவேண்டியவர்தான்.

தென் வியட்நாம் பிரதமர் நிகோதின் தீமை எதிர்க்கும் மததலைவர்கள் மூவரில் இருவரது சேனை கைகோர்த்துக் கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது. ஏற்கெனவே சர்க்காரிடம் தோல்வி கண்ட பின் ஸுயென் தரப்பும் ஹோவா ஹோவா தரப்பு சேனை 37000 பேரும் நாளை ஸைகோன் நகருக்குள் உணவுப் பொருள்கள் செல்ல முடியாமல் முற்றுகையிட விருப்பதாகச் சொல்லப் படுகிறது. மீண்டும் உள்நாட்டு போர் அபாயம் தோன்றியிருப்பதையடுத்து ஹோவா ஹோவா தரப்பு சேனை ஊன்றிக் கொண்டிருக்கும் அரிசி வள மிரதேசத்துக்கு சர்க்கார் துருப்புகள் விரைகின்றன.

தென் வியட்நாம் நிலைமையை ஆராய தீம் அழைப்பு விடுத்திருந்ததை பிரிட்டன் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று லண்டனில் பிரிட்டிஷ் வெளிநாட்டு விவகார இலாகா கூறியது. இந்தப் பேச்சுக்களில் தென் வியட்நாமுடன் பிரிட்டிஷ் பிரஞ்சு அமெரிக்க பிரதிநிதிகள் கலந்துகொள்வராம்.

வருந்துகிறோம்

சேலம் மாவட்ட தி. மு. க. ...ாளர் தோழர் ஜி. பி. ...சுந்திரம் அவர்களின் தா பார்வதியம்மாள் 20-5-55 9 மணிக்கு தனது 116வது ...யற்கை எய்திவிட்டார்க ...றிந்து பெரிதும்

தென்றல்

ஜூன் 18வ இதழில்

◎

கண்ணதாசன்

எழுதும்

'ராஜ தண்டனை'

பாவலன் மகனும்

காவலன் மகளும்

கொண்ட காதலை

கவி நயத்தோடு

கூறும் நாடகம்.

◎

அதே இதழில்

சொல்லின் செல்வர்

ஈ. வி. கே. சம்பத்

எழுதும்

வாழ்வது எப்படியோ ?

திராவிடத்தின் பொருளாதாரம்

பற்றிய

தொடர் கட்டுரை.

◎

மறவாதீர்

ஜூன் 18, தென்றல் இதழில் !

வெண்பாப் போட்டி

★

வெண்பாப் போட்டி 8

"நாதத்தில் இல்லை நயம் !"

முடிவு அடுத்த இதழில் வெளிவரும்

எண்ணம்

கண்ணதாசன்

தமிழகத்து அரசியல் வானிலே, இடையிலே இல்லாதிருந்த ஒரு ஆபாசப் போக்கும் பேச்சும் மறுபடியும் துவக்கப்பட்டது சில ஆண்டுகட்கு முன்பு. நேர்வழியிலே திராவிட இயக்கத்தை எதிர்த்து, அரசியலிலோ சமுதாயத்திலோ முக்கியத்துவம் பெறமுடியாத சில 'பிறப்பால் மனிதர்கள்' இந்த மறு திறப்பு விழாவை நடத்திவைத்தார்கள். கொள்கை எதிர்ப்பை தூரத்தில் நிறுத்திவைத்து விட்டு, திராவிட இயக்கத்தாரின் ஆழ, நீள, அகலம் பார்க்கத் தலைப்பட்டார்கள். இவர்கள், பிழைப்புக்கு வேறு வழியில்லாது இந்த 'வேலை' செய்து, காங்கிரஸ் வட்டாரத்தில் ஒட்டிக்கொண்டு வயிறு வளர்த்தார்கள் என்றாலும், அந்த இழிசெயல் அன்றுமுதல் தொடர்ந்து சில 'பைசா'க்களால் நடத்தப்பட்டு வருகிறது.

"சமுதாய மனிதன்" என்ற முத்திரை போட்டுக்கொண்டு மேடையேற-பேச - எழுத வருகிறவன் எவனும் எதிர்ப்புக்குத் தப்ப முடியாது என்றாலும் திராவிட இயக்கத்தாரைத் தவிர மற்றோர் கீழ்த்தரமான முறையில் தாக்கப்பட்டதில்லை. (திராவிட இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியாக இருந்து காங்கிரஸைக் கடுமையாகத் தாக்கிய காலத்தில்கூட கீழ்த்தர வழியில் இறங்கியதில்லை) ஆனால், ஆண்டாண்டு காலமாக இருக்கும் மூடத்தனத்தைச் சாடுகிற காரணத்தாலே திராவிட இயக்கத்தார் மீது சில கைமாற்றுக்காரர்களின் நச்சுப்பல் படிகிறது. அரசியல் குழப்பம் அறியாத பெண்டு, பிள்ளை, குடும்பத்தார்கூட இந்தத் தாக்குதலில் இழிவுபடுத்தப்படுவது சாதாரணமாகிவிட்டது.

பத்திரிகை என்ற பெயராலே வெள்ளைக்காகிதத்தைக் கருப்பாக்கிக்கொண்டு கடையில் தொங்குகிற எதுவும் திராவிட இயக்கத்தாரைப் பற்றி எழுதாமல் இருப்பதில்லை. இதனாலே ஆத்திரம் கொண்டுள்ள லட்சோப லட்சம் திராவிட முன்னேற்றக் கழகக் காளைகளுக்கு அறிஞர் அண்ணா அவர்கள், 'திராவிட நாடு' ஏட்டிலே அருமையானதோர் கடிதம் எழுதியுள்ளார்கள். அதில்,

> "நமது இயக்கம் நன்றாகத் தழைத்திருப்பது கண்டு அருவருப்பு அடைபவர் பலர் உண்டல்லவா-அவர்கள், அவர்களின் பண்புக்குத் தக்கபடி பழிசுமத்துவதும், புகார் கிளப்புவதும், வதந்திகளை உலவவிடுவதும், வம்புக்கு இழுப்பதுமாகத்தான் இருப்பர். நாம் அவைகளைப்பற்றிக் கவலைப்படக்கூடாது. நாம் கவலைப்படவேண்டும்; கோபமடைய வேண்டும் என்பதற்காகத்தானே அவர்கள் அவ்விதம் பேசுவதும் எழுதுவதும்! அந்த வலையில் நாம் விழலாமா!"

என்று கேட்டுள்ளார்கள். இந்த அறிவுரையை நாம் மனதிலே அச்சேற்றி வைத்துக்கொள்ள வேண்டும். நாட்டிலே நமக்கிருக்கும் செல்வாக்கு, வேறு யாருக்கும் இல்லை. கூட்டத்திற்கு ஆள்பிடிக்கும் பலருக்கு-பத்திரிகைக்கு வாசகர் தேடும் பலருக்கு இது வயிற்றெரிச்சலைக் கிளப்புவது இயற்கை. புகழ்ப்பசியும் வயிற்றுப்பசியும் ஒருங்கு சேர்ந்து அவதிப்படும் சில பரிதாப உருவங்களுக்கு இந்த வயிற்றெரிச்சல் கட்டுக்கடங்காமல் போயிருக்கிறது. அந்தத் தீயிலே அவர்கள் கருகிப்போகும்படி விட்டுவிட்டு நாம் நமது பணியைத் தொடரவேண்டும். அதுபற்றி கவலைப்படுவதும் ஆத்திரப்படுவதும், அண்ணா அவர்கள் கூறியுள்ளது போல, அவர்கள் எண்ணத்திற்குச் சாதகமாகிவிடும். அதே கடிதத்தில் அண்ணா அவர்கள் கூறியிருப்பது போல, நம்மைப் பற்றி, இடுப்பொடிந்ததுகளும் இஞ்சி தின்றதுகளும் பேசுவதாலும் எழுதுவதாலும் நமக்குக் குறைவேற்படப் போவதே இல்லை. இழிசொற்கள் நமக்குப் புதுமையாகவும் கவலைதருவனவாகவும் இருந்த கட்டத்தை எப்பொழுதோ நாம் தாண்டியாகிவிட்டது. "வீசப்பட வேண்டிய பழிச்சொல் அவ்வளவும், எவ்வளவு வேகமாகவும் திறமையுடனும் வீசப்படவேண்டுமோ அவ்விதம் வீசிப் பார்த்தாகிவிட்டது. இப்போது கிடைப்பதெல்லாம் மறுபதிப்புகள்-இலவச வெளியீடுகள்-எளியபதிப்புகள்!! இவைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டிய நிலையில் நாம் இல்லை!"

மேலும், முன்பு நம்மை ஏசியவர்களுக்காவது ஓரளவு தகுதியிருந்தது, இப்போது அதன் மறுபதிப்பு வெளியிடுபவர்கள் யாவரும் தப்பித்தவறி நம் கண்பார்வை படக்கூடத் தகுதியற்றவர்கள். இவர்களைப் பற்றி ஒரு விநாடி சிந்திப்பதுகூட, அந்த வினாடியை வீண்படுத்துவதற்கு அடையாளமாகும்.

"பார் பார்! மதுரையிலே மண்மலை விழுந்து கொட்டிவிட்டது; கோவில்பட்டியிலே சாணிமலை கரைந்துவிட்டது!" என்று கொட்டை எழுத்திலே வெளிச்சம் போட்டு, நமது இயக்கமே கரைவதாகக் காட்டிக்கொள்ள முற்படுபவர்களெல்லாம், இயக்கம் கரையவேண்டும் என்ற தங்களது ஆசையை வெளிப்படுத்துகிறார்களே தவிர கரைந்ததைக் கண்டு சொல்லவில்லை. பிழைப்புக்கு இடந்தேடி, எங்காவது சந்தர்ப்பம் கிடைக்காதா என்று அரசியலிலே தொழில் புரிய வந்தவர்கள்தான், இங்கு இடமில்லை என்ற நிலையில் நியாயமாகப் போய்ச்சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இது உள்ளே இருந்து உண்மையறிந்த நமக்கு நன்றாகத் தெரியும். இதைத் தவிர வேறு சந்தர்ப்பம் 'செய்தி பொறுக்கி'களுக்கு எப்போது கிடைக்கப்போகிறது! எங்காவது இயக்கத்தின் கழிபொருட்கள் விழாதா என்று ஏங்கிக்கிடந்து, வெகுகாலத்திற்குப் பிறகு கண்டுபிடித்து, அவற்றைத் தங்கள் தொழிலுக்காக மடியில் தூக்கி வைத்துத் தாலாட்டுகிறார்கள். அண்ணா கூறியுள்ளதுபோல, "இப்படி(வேறு கட்சிக்கு) 'பயணம்' நடத்தியவர்கள் பலர் அவர்களிலே யார் இன்று உருவம் தெரியும் நிலையில் இருக்கிறார்கள்?" இது அந்த இழிசொல்லாளர்களுக்கும், இடறி விழுந்தவர்களுக்கும் தெரியவேண்டும்.

ஒரு முறை யாராவது சில சில்லறைகள் நம்மைத் தாக்கும்போது, மனக்கண் முன்னே, மேடையில் நம்மைக் கண்டு அன்புக் கண்ணீர் சிந்தி அரவணைத்துக்கொள்ளும் ஆயிரக்கணக்கான செல்வங்களைக் கண்டால், நம்மை ஏசியவன், தூசு என்கிற எண்ணம் வலுவாக உண்டாகும்! அன்பு நிழலிலே ஒன்றுபட்டிருக்கும் நமது குடும்பம், உலக வரலாற்றில் இதுவரை காணப்படாத குடும்பம். அதற்குள்ளே சிறு சிறு தகராறுகள் வருவது சகசம். அதுபோல் அதைத் தீர்த்துக் கொள்வதும் சாதாரணம்: தீர்த்துக் கொள்வதற்குள் உள்ள இடைக்காலத்திலே அதைப் பெரிதாக வளர்த்து விடாமல் இருப்பதுதான்-இனி நாம் கடைப்பிடிக்கவேண்டிய முறை. கோப உணர்ச்சிகள் நம்மை அலைக்கழித்தது போதும், இனி அது மாதிரி தப்பித்தவறி நேர்ந்தால் பொதுச்செயலாளரிடமோ, குடும்பத்தலைவர் அண்ணா அவர்களிடமோ சென்று அதைமுறையிட்டுக்கொள்வது நலம். தகாத சேர்க்கைகள் தார்போடுவதால் உணர்ச்சி மேலிட்டு விடக்கூடாது. (முதலில், தகாத சேர்க்கையே கூடாது!) இதனை கவனத்தில் கொள்வது, குடும்ப நலனுக்கு ஏற்றது.

இறுதியாக அறிஞர்அண்ணா அவர்களின் கடிதத்தில் காணப்படும் முடிவெல்லை வாசகங்களை மீண்டும் கவனப்படுத்த விரும்புகிறேன். அது இது.

> "இங்குள்ள 'பத்திரிகைகள்' நமது மூலாதாரக் கொள்கையை மறுப்பன. எனவே, அந்தக் கொள்கையை இருட்டடிப்புமூலம் சாகடிக்கலாம் என்று எண்ணுகின்றன. இதிலிருந்து நாம் தப்பவேண்டுமானால், ஒவ்வொரு கிளைக்கழகமும் தனிப்பட்டவர்களும்கூட, இயக்கக் கருத்துக்களையும், அக்கருத்துகளுக்கு ஆக்கம் தரும் நிகழ்ச்சி பற்றியும், அவ்வப்போது துண்டு அறிக்கைகள் வெளியிட்டு, வீடு தோறும் வழங்கவேண்டும். நமது இயக்கக் கருத்துக்கள் பொதிந்த பாடல்களையும் நாடகங்களையும் மேலும் வளமும் வண்ணமும் உள்ள தாக்க வேண்டும். புள்ளி விவரங்களைத் தயாரித்து, முச்சந்திகளில் பொறித்துவைக்கவேண்டும். கழகத் தோழர் ஒவ்வொருவரும் இம்முறையில் ஏதேனும் ஓர் பணியாற்றி, இயக்கத்துக்குத் தொண்டாற்ற வேண்டும். ஒரு திங்கள் இம்முறையில் பணியாற்றிப் பாருங்கள், உங்கள் மனதுக்கே புதியதோர் உற்சாகம் பிறக்கும்: நோக்கம் இவ்வகையில் திரும்பினால், பிறகு, சிறு சச்சரவுகள் பற்றிய சிந்தனையும் அற்றுப்போகும், சீரழிவானவர் வீசும் சிறு சொல்லும் நம்மைச் சுடாது."

நம்புங்கள்! நேருதான்!

போலிச் சாமியார்களையும், பொல்லாது புரியும் 'அரிகரதாஸ்'களையும் காட்டுக்கு, நாம் அறிமுகப்படுத்தியபோது—அம்பலமாக்கியபோது நம்மீது சீறி விழுந்த பண்டாரச் சன்னதிகள் எத்தனைபேர் தெரியுமா? அவர்களெல்லாம்--அந்தச் 'சுகவாசி'களெல்லாம் இந்த வாரம், டில்லியிலே பண்டித நேரு பேசியிருப்பது கண்டு என்ன செய்யப்போகிறார்களோ தெரியவில்லை, அந்தப் பேச்சை கீழே தந்திருக்கிறோம்; நீங்கள் திடமாக நம்பலாம், இது நேருவின் சொற்பொழிவுதான்-சுதேசமித்திரன் இதழில் வெளிவந்தவைதான்; இதோ, "சாதுக்கள் பற்றி மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சாதுக்களில் பெரும்பாலானவர்கள் உண்மை சாதுக்கள் அல்ல, காவி உடைகள் தரிப்பதன்மூலம் இவர்கள் மக்களை ஆகர்ஷிக்கின்றனர். ஆனால் காவி உடை அணிந்திருந்தால் மாத்திரமே உண்மை சாதுவாகிவிட முடியாது. இந்தியாவில் 80 லட்சம் சாதுக்கள் இருக்கின்றனர். எவ்வித வேலையுமின்றி இவர்களில் பலர் சொகுசான வாழ்க்கை நடத்துகின்றனர். நன்றாக சாப்பிடுகின்றனர். நிரபராதியான மக்களை மதத்தின் பெயரைச் சொல்லி ஏமாற்றி அவர்களிடமிருந்து பணம் பறிக்கின்றனர். தங்களை ஏமாற்றுவதற்காகவே சாதுக்கள் வேஷத்தில் வரும் இத்தகையவர்களிடம் மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடாது."

அந்த ஊரிலே முதுமை பெற்ற கூந்தல் பனைகள் ஏராளம். தலை விரித்த விதவைப் பெண்களைப் போல காய்ந்த ஓலைகள் ஒவ்வொரு மரத்திற்கும் பதினைந்து வீதம் தொங்கிக் கொண்டிருக்கும். ஊரின் முகப்பிலே ஒரு தெப்பக்குளம்--ஆனால் இப்போது அதிலே தெப்பம் ஓடுவதில்லை. கப்பலோட்டும் காலத்தில் தெப்பம் விடுவது அநாகரீகமென்றும் அந்த ஊரார் எண்ணிடவுமில்லை. அந்தத் தெப்பக் குளத்திற்கும், தண்ணீருக்கு மிருந்த உறவு முறிந்து பன்னிரண்டு ஆண்டுகளாகிவிட்டன! குளத்தின அடித்தளம் பிளவு பாய்ந்து கிடந்தது. திருவிழா காலங்களில் கண்சிமிட்டும் மீன்மாளிகையாகத் தோற்றமளித்துவந்த, அந்தத் தெப்பக் குளத்தின் மையமண்டபம், இப்போது மாடோட்டிகளின் தூங்குமட மாகிவிட்டது. மண்டபத்தின் கற்றூண்களைச் சுற்றி செதுக்கப்பட்டிருந்த கர்ஜிக்கும் சிங்கமுகச் சிற்பங்கள் கவனிப்பாரற்று செதில் பெயர்ந்து கிடந்தன. மண்டபத்தில் பதிக்கப்பட்டிருந்த பெரும், பெரும சதுரக் கற்களிலெல்லாம், அந்த ஊரின் பிரமுகர்களைப் பற்றிய சிறு சிறு குறிப்புகளை அந்த ஊர் ‘லெனின்’கள் ‘புரட்சியின் பிதா’க்கள் கரியால் தீட்டி வைத்திருந்தார்கள். விளைகின்ற நெல்லை, பதரோடும், பறுக்கையோடும், நல்ல விலைக்கு வியாபாரிகளிடம் தள்ளி அதனால் வந்திருக்கின்ற செல்வம் விரயமாக, உயர்படிப்புக்கு வெளியூர்களுக்கு அனுப்பபட்டும் அந்த ஊர் செல்வச் சீமான்கள், தண்ணீர் இல்லாத அந்தத் தெப்பக் குளக்கரையைத்தான் குளிர் தென்றல் வீசிடும் கடல்கரையாகக் கருதினார்கள். கல்லூரி விடுமுறை நாட்களில் மாணவர்பட்டாளத்தார் மாலை நான்கு மணிக்கே அந்த மைய மண்டபத்தை முற்றுகையிட்டுவர். 304 ஒரு பக்கம் நடக்கும்; ‘நாமம்’ தான் தோல்விக்குத் தண்டனையாக இருக்கும். ‘பாயிண்ட் பிக்’ மற்றொரு பக்கம் நடைபெறும்; வசதி கொண்டார் அதில் பங்கேற்றிருப்பர், அதனால் பணம் அங்கே புரளும். இப்படி பலப்பல குழுவினர் மைய மண்டபத்தில் ‘மைனர் வாழ்வு’ நடத்துவர். ஒரு காலத்தில் துளசிங்கமும், தீர்த்தபதியும் அந்த ...னர் விழாவில் பங்கேற்றிருந்த ...ர்தான். ஏன்? அந்த மைனர் ...க்கு அவர்கள் தொடர்ந்து ...ண்டுகள் தலைமை தாங்கி ...துமுண்டு. ஆனால் அவர் ...ப்போதெல்லாம் அந்தக் 9 ...ா எண்ணிப் பார்க்கிறார் ... மைய மண்டபத்தை ... மையமண்டபமாக எண்ணி கும்மாளம் போட்டு வந்தார்களோ, எந்த மையமண்டபத்தை பொது விடுதியாகக் கருதி ‘போக்கிரித்தனங்கள்’ புரிந்து வந்தார்களோ, அதே மையமண்டபத்தைத்தான் இப்போது அவர்கள் வாயாலேயே காலிகள் மந்தை என்கிறார்கள்; சூதாட்டக் கூடாரமென்று இழித்துப் பேசுகிறார்கள். கற்றாளம் பழத்தைத் தின்று கொண்டு மெல்லிய மூங்கில் கழியிலே கன்னியைச் சொருகியபடி ஓணான் வேட்டையாடிய அந்த ‘அடங்காப்பிடாரி’கள்தாம் இன்று, இதழிடுக்கில்எளனப் புன்னகையை உபிநயிக்கச் செய்துகொண்டு இயந்திர ஊர்தியில் மிதந்து செல்கிறார்கள். இதுகண்டு, அவர்களையொட்டிய வாலிபர்கள் பொறாமைப் பட்டதில்லை. பொல்லாங்கு செய்திட எண்ணியது கூடக் கிடையாது. ஆனால் அவர்களுக்காகப் பரிதாபப் பட்டதுண்டு. பரிதாபமா? ஆம் பரிதாபம் தான்! பவிசு வாழ்க்கை நடத்தும் அந்த இரு வாலிபர்களிடையே பின்னிக்கிடக்கும் மர்மச் சுழல்பற்றிய சிறுகதை அது. அது ஊரறிந்த ரகசியம் என்றாலும் யாரும், துணிச்சலாக வெளியில் மனவிட்டுப் பேசிக்கொள்வதில்லை. என் காதுக்கு அதுபற்றிய தகவல் சிறிது கிடைத்தது. அதை எழுத்து வடிவாக்கி கட்டுக்கோப்பாக அமைத்துத் தந்திருக்கிறேன். படியுங்கள்! இப்படி எந்த ஊரிலாவது நடந்திருந்தால் என்மேல் பழிசுமத்தி விடாதீர்கள்.

★

வடிவேலர் கலங்கினார். குடும்ப ரகசியம் வெளிக்குத் தெரிந்தால் பெருத்த கேவலமாயிற்றே என்று துக்கித்தார். மாவலிக் கண்மாய் ஜமீன் சொத்துக்கு பாத்தியதையுடைய இரண்டு பெண்களும் இப்படிப் போவார்களென்று, அந்தப் பெண்களின் பாலபருவத்தில் எந்தச் சோதிடனாவது தவறிச் சொல்லியிருந்தால்கூட, அந்தக் குழந்தைகளை, பிறந்த வீட்டிலேயே கழுத்தை நெறித்துக் கொன்று எறிந்திருப்பார். மானம், மரியாதைக்கு அவ்வளவு கட்டுப்பட்டவர் மாவலிக் கண்மாய் ஜமீன்தார்.

குங்குமப்பூ கலந்து, சுவைகூட்டித் தந்த பசும்பாலாக இருந்தாலும், மூத்தமகள் மீனலோசனி கையால் தந்தால்தான் ஜமீன்தார் தொண்டை பாலுக்கு வழிவிடும்; இளையவள் இருக்கிறாளே ஊர்மிளா, அவளிடம்தான் ஜமீன்தார் ‘ஊர் அகவல்’களையெல்லாம் சொல்லித் தீர்ப்பார். மூத்தவள் கையால் குங்குமப்பூப் பாலைக் குடித்துவிட்டு, இளையவள் கையால் திண்டுக்கல் தளிர் வெற்றிலையை போட்டுக் கொண்டு படுக்கையில் சாய்ந்தால் தான் அன்றைய வேலைகள் எல்லாம் திருப்திகரமாக முடிந்துவிட்டது என்று ஜமீன்தார் சாந்தி கொள்வார். இது அப்போது; குமாரிகளுக்கு திருமணம்ஆவதற்கு முன்பு! இப்போது? ஜமீன்தார் மீனலோசனியின் முகத்தையே பார்ப்பதில்லை! ஊர்மிளாவின் குரல் கேட்டால் முதல் கட்டுத் தாண்டி, மறு கட்டுக்குப் போய் விடுவார் மாளிகையில். தன் மக்களின் ‘தான் நினைத்த செயல்கள்’ அந்த வயோதிகச் சீமானை எலும்பும் தோலுமாக்கிவிட்டன.

★

துளசிங்கம், ஜமீன்தாருக்கு தங்கைமகன். மூத்தவள் மீனலோசனி அவனுக்குத்தான் உரிமைப் பட்டவள். அவன் ஊரிலே உதவாக்கறையாக இருந்தகாலத்திலே கூட மாவலிக்கண்மாய் ஜமீனில் அவனுக்கு ஒருவித மரியாதை இருக்கத்தான் செய்தது. ஊருக்கெல்லாம் நீதி கூறுவார் ஜமீன்தார்; ஆனால் தனக்கு வாய்க்கப் போகும் மாப்பிள்ளை, ‘அகில இந்திய ரௌடி’யாக இருந்தாலும் கண்டிக்க முடிவதில்லை; மகளைத் தரமுடியாது என்றும் சொல்லமுடிவதில்லை. இப்படி ஒரு விசித்திர நியதி ஜமீன் வாரிசில் இருந்தது! பி. ஏ. பட்டம் பெறுவதிலே, சஜினமாமூதுவையும் தோல்விகாணச் செய்த அந்த ‘மாவீரன்’ துளசிங்கம் சமுதாய முறைப்படி மீனலோசனிக்கு மணாளனானன். ஜமீன்தாரின் ஆயுட்காலத்திலேயே, அவர் நினைத்தபடி, ஒரு சிக்கனமான விழா தன்னுடைய ஜமீனில் நடந்திருக்கிறதென்றால், அந்த விழா அவருடைய மக்களின் திருமணங்கள்தான். ஆம்; மீனலோசனியின் திருமணத்தன்றே, தன் இளைய மகளுக்கும் திருமணத்தை முடித்துவிட்டார் ஜமீன்தார். இளைய மாப்பிள்ளை தீர்த்தபதி துளசிங்கத்திற்கு சிறிதும் சளைத்தவனல்ல. தீர்த்தபதி சத்ருக்கோட்டை ஜமீனின் செல்லப் பிள்ளை. பெற்றோரை இழந்த குலவிளக்கு. அவனுக்கு

உரிமையானாள் ஊர்மிளா. சத்ருக்கோட்டை ஜமீனும், மாவலிக்கண்மாய் ஜமீனும், ‘அந்த இரட்டை காதல் ஜோடி’களுக்கு நீச்சல் குளங்களாயின.

திருமணமான மறுஆண்டு இளைய மாப்பிள்ளை தீர்த்தபதி வெளிநாடு பயணமானான்.

மனைவி ஊர்மிளாவையும் உடன் அழைத்துச் செல்ல தீர்த்தபதிக்கு ஆசைதான்: ஆனால் கடல், கடப்பது பாவமென்று கருதும், வைதீக உள்ளம் படைத்த மாவலிக்கண்மாய் ஜமீந்தார் மகளை அனுப்ப மறுத்துவிட்டாரே, அதற்கு என்ன செய்யமுடியும் தீர்த்தபதியால்! பொற்கிளியை-தன் வாழ்வின் பங்குதாரியை பிறந்தகத்திலேயே விட்டு விட்டு ஸ்வீடன் சென்றான். ஒரு வருடம் எப்படியோ ஓடிவிட்டது. தீர்த்தபதி சுந்தரபுருஷனாக நாடு திரும்பினான். மாவலிக்கண்மாய் ஜமீன் சார்பாக அவனுக்கு மாபெரும் வரவேற்பு நடத்தப்பட்டது. கொழுந்தி மீனலோசனி ஆரத்தி எடுத்தாள்--அவளுடைய மென்கரத்தால் தீர்த்தபதியின் நெற்றிக்குத் திலகமிட்டாள். பூரித்தான் தீர்த்தபதி; ஆனாலும் அவனுடைய பாசக் கருவிழிகள் அவனுக்குச் சொந்தமான ஊர்மிளாவைத் தேடத்தான் செய்தன. ஆனால் அவள் அங்கில்லையே! உதகமண்டலத்திலல்லவா உல்லாசியாக இருக்கிறாள்!

★

நண்பர்களின் விருந்துபசாரமே, இன்னும் தீர்த்தபதிக்கு முடிந்தபாடில்லை. சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகள் நீண்டு கொண்டே போயின. எங்கே முகாமடித்திருக்கிறான் தீர்த்தபதி என்று அவனுடைய மாமனாருக்கே தெரியவில்லை என்றால்...!

கோடை வெயிலை மிதப்படுத்தி அருந்த உதகை சென்ற ஊர்மிளா மாவலிக்கண்மாய் சேர்ந்தாள். அவள் முகத்திதிலே களிப்பிருந்தாலும், விழியிலே இன்பபோதை வழிந்தோடினாலும், சிறுசிறு கரும் புள்ளிகள்போல, களங்கத்துளிகள் அவள் முகத்திலே காணமுடியாத திரவப் பொருளாக தெளிக்கப்பட்டிருந்தன.

‘‘அக்கா!’’--பாசம் தோய்ந்த குரலில், அழுகை பின்னிய தொனியில் அழைத்தாள் ஊர்மிளா.

‘‘மன்னித்துவிடு தங்காய்! மனிதப் பிறவிக்கே உரித்தான விபரீத ஆசை யாரை விட்டது கண்ணே!’’--என்றாள் அக்கா மீனலோசனி.

ஊர்மிளாவுக்கு ஒன்றும் புரியவில்லை. தன்னுடைய கணவன் நாட்டில் இல்லாத நேரத்தில் உதகையில் மற்றவரின் அணைப்புக்கும், நுகர்ச்சிக்கும் இன்பப் பொருளாகி விட்டதை நினைந்து தன்னுடைய அக்காளிடம் மன்னிப்புக்கேட்கவந்த ஊர்மிளாவுக்குமீனலோசனியின் ‘பணிவு’ விந்தையைத் தான் தந்தது. சீறி விழுவாள் என்று எதிர்பார்த்தவள்--சிணுங்கிக்கொள்வாள் என அஞ்சி வந்தவள் அக்காவின் கண்ணீர் கண்டு பேயறைந்த முகத்தினளானாள்.

‘‘அக்கா!’’--கத்தினாள் ஊர்மிளா.

‘‘ஊர்மிளா!’’--கெஞ்சினாள் மீனலோசனி.

ஆனால் இந்தப் புதிரை ஒருவருக்கொருவர் விளங்கிக் கொள்வதற்கு இரண்டு மாதங்கள் பிடித்தன. ஒரு நாள் ஊர்மிளா தன் தவறை தன் அக்காவுக்கு கடிதமூலம் தெரிவிக்க முடிவு செய்துவிட்டாள்.

‘‘அன்புள்ள அக்கா, உனக்கு நான் துரோகம் செய்து விட்டேன். உனக்கே உரித்தான அத்தானை நான் கவர்ந்துகொண்டு விட்டேன். என் அத்தான் தாயகம் திரும்பி

(10-ம் பக்கம் பார்க்க)

★ கூத்து ★

'விருத்தாப்பியப் பதிவிரதை'களின் பெர்ஹாம்பூர் நீலிக்கண்ணீர்

வீறுபெறும் புரட்சியடக்க வீசப்படும் 'மாய வலை'யே !

கதிரவன்

இயல், இசை, கூத்து என்ற வரிசையில் மூன்றுவதைப் பற்றிய கட்டுரையோ அல்லது விளக்கவுரையோ இதுவல்ல. அண்மையில் பெர்ஹாம்பூரில் நேரு பிரதம நடிகராகவும், தேபர், சார்லி சாப்லின் மீசையுடன் ஹாஸ்ய நடிகராகவும் வேடங்கள் தாங்கி ஒரு கூத்து நடத்தினர்கள். சில்லரைக் கூத்தாடிகள் ஏராளம்; அவர்கள் பேசிய விஷயங்களோ விநோதமானவை மட்டுமல்ல, ஏராளமானவையுங்கூட; கூத்தென்றல் அஃதன்றே கூத்து-கருத்தேயில்லாத கூத்து !

மே 8-காங்கிரஸ் செயற்குழு கூடி நகல் தீர்மானங்களைத் தயாரித்தது.

மே 9-அ. இ. காங்கிரஸ் கமிட்டி கூட்டம் தொடங்கிற்று. பூமிதான இயக்கத்தில் பணிபுரிய விஞேபா பாவே வேண்டுகோள் விடுத்தார்.

மே 10-அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து பிரதமமந்திரி நேரு சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தை முடித்து வைத்துப் பேசுகையில் காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபர் "அ. இ. காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் ஆச்சார்ய விஞேபா பாவே கலந்துகொண்டு சொற்பொழிவாற்றியது நம் அதிர்ஷ்டவசமே. பாவே பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிருர். பூமிதான இயக்கத்தில் எல்லாகாங்கிரஸ்காரர்களும்சேர்ந்துகொண்டு அது பூரண வெற்றிபெற உதவவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

"பூதான இயக்கம் நாட்டில் ஒரு புதிய புரட்சியை உண்டாக்கிவிட்டது. நிலப்பிரச்சினையைத் தீர்க்க இது பெரிதும் உதவும்; மற்ற பிரச்சினைகளும் தீர இது உதவும். ஆச்சார்ய பாவே மிகச்சிறந்த வேலை செய்து வருகிருர்" என்று கூறி ("சுதேசமித்திரன்," 11, 12-5-55) பண்டித கோவிந்த வல்லப பந்த் மங்களம் பாடினர்,

ஆச்சார்ய விஞேபா பாவே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பேசியது இதுதான் முதல் தடவை. காங்கிரஸ் தலைவரின் விசேஷ-அழைப்பின்பேரில் விஞேபா பாவே கலந்துகொண்டார். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து தனி நபர் சத்தியாக்கிரக இயக்கத்தை உத்தமர் காந்தியார் ஆரம்பித்தபோது முதல் சத்தியாக்கிரகியாக விஞேபா பாவேவைத் தேர்ந்தெடுத்தார். அந்த ஒரு தகுதி தவிர நாட்டின் எத்துறையிலும் அவருக்கு வேறு தகுதி அரசியல்கட்சிக்கு ஆலோசனை கூறும் வகையில் இருப்பதாகத் தெரியவில்லை.

நிலப்பிரச்சினை, நிலப்பிரபுக்களின் தயவால், திருந்திய மனப்பான்மையால் தீர்ந்துவிடக் கூடியதல்ல. எந்த நாட்டிலும் புரட்சிக்குப் பின்னர்தான் - ரத்தக்களரி ஏற்பட்டுத்தான் சமதர்ம அடிப்படையில் நிலப்பங்கீடு நடைபெற்றுள்ளதாக அறியக்கிடக்கின்றது. 'மயிலே, மயிலே, இறகு போடு' என்ற கெஞ்சும் அடிப்படையில் எத்தர்களை-வீணில் உண்டு கொழுத்திடுவோரை அணுகுகிறது, பூமிதான இயக்கம். அவ்வியக்கத்தை நடத்துகின்ருேர் நிலை பரிதாபத்திற்குரியது. விருத்தாப்பிய பதிவிரதைகளின் கொலு என்றைழக்கலாம் அவர்களை.

மடமை நிறைந்துள்ள இந்தியாவில், பழமையின் பிடியும், பிரபுத்துவத்தின் இறுமாப்பும், வைதீகத்தின்செல்வாக்கும் தளர்ச்சியடையாதிருக்கும்பொழுது, மக்களிடையே சுபிட்சம் விரைவிலோ தொலைவிலோ ஏற்படுமென்பதற்கான அறிகுறி எதுவும் தோன்ருதிருக்கும் பொழுது, பூமிதான இயக்கத்தினுல் உலக சமாதானத்தை நிலைநாட்ட முடியுமென்று தைரியமாகச் சொல்லியிருக்கின்ருர் சாமியார். மன்னர்களுக்கும் மடாதிபதிகளுக்கும் மிராசுகளுக்கும் பூமான்களுக்கும், சீமான்களுக்கும் பக்கபலமாயிருப்பதற்காகவும், திரண்டுவரும் ஏழைகளின், பாட்டாளிகளின் கோபாக்கினி பூரண உருப்பெற்று வேலை செய்திடாது உண்டுகொழுத்திடும் உலுத்தர் கூட்டத்தைப் பொசுக்காமலிருப்பதற்காகவும் தோற்றுவிக்கப்பட்டதே பூமிதான இயக்கம். புரட்சி எனும் விதைக்கு வெந்நீர் ஊற்றுவதே பூதான் இயக்கம்.

சாமியார்களையும் சாமியாடிகளையும் உறுதுணைகளென நம்பி இந்தியத் துணைக்கண்டத்தில் பல காலங்களிற்ருேன்றிய ராஜ்யங்கள் எத்தனையோ அழிந்துபட்டிருக்கின்றன என்பது வரலாறு கூறும் உண்மை. இன்று நிதர்சனமாகக் காண்கிருேம் சாமியாரின் ஆதிக்கம், அரசியல் கட்சியான காங்கிரஸில் இடம் பெறுவதற்கான கால் கோள்விழா பெர்ஹாம்பூரில் நடைபெற்றதை.

மேலும், இனி நடக்கவிருக்கும் அ. இ. காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களில் ஆச்சார்யவிஞேபா கலந்து கொள்ள தாம் அவருக்கு நிரந்தரமான அழைப்பை விடுப்பதாக காங்கிரஸ்தலைவர் பெர்ஹாம்பூரிலே கூறிவிட்டார். அரை நிர்வாண மனிதர் அரசியல் கட்சியின் கமிட்டிக் கூட்டத்திலே இடம்பெறுகின்ருர். காந்தியார் இடம் பெறவில்லையா என்ற கேள்வி இவ்விடத்தில் எழுவது இயற்கையே! ஆனுல் எல்லா அரைநிர்வாண மனிதரும் காந்தியல்லவே; காந்தியாரும் சாமியாரல்லவே ! இதோடு நில்லாமல் தமிழகத்தின் கண் ஒரு காவி, அடுத்த தேர்தலில் பக்தர்கள் போட்டியிட வேண்டுமென்று கொக்கரித்தது கோவையில்! என்ன நெஞ்சழுத்தம்? இந்த நிலை வளர்ந்தால் 'நாடு என்ருல் என்ன?' என்று திராவிட மக்களும், முற்போக்குப் பார்தையில் நம்பிக்கை கொண்டுள்ள ஜனநாயக வாதிகளும் சந்தேகம் கொள்ளவேண்டி ஏற்பட்டாலும் ஏற்படலாம் போலும்! ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இருக்கும்-இருக்கவேண்டிய தொடர்பு பற்றிய ஆராய்ச்சியில், காட்டிலே தனிமையில் கனிவகைகளை மட்டும் புசித்தவாறு ஈடுபாடு கொண்டவர்களாக காலங் கடத்த வேண்டிய சாமியார்கள் நாட்டிலே நாயகர்களாக அரசியலிலே ஆலோசனை கூறும் நிலை

உண்டாவது நாட்டுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாகாது. வேறு நாடுகளில் அரசாண்ட ஆண்டிகளால் மக்களுக்கு உண்டான தீமைகளும் உபத்திரவங்களும் பல என சரித்திரம் செப்புவதும் மறந்துவிடக் கூடியதல்ல.

அடுத்தபடி விஞேபா பாவேயின் தயவைப் பெறவோ அல்லது அவரை ஏமாற்றவோ நேரு கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார். "சோஷலிசம் என்ற வார்த்தையை என் நாம் உபயோகிக்க வேண்டும்? சர்வோதயம் என என் கூறக் கூடாது. என்ற கேள்வி பிறக்கலாம். சோஷலிசம் என்பதைவிட சர்வோதயம் என்பது இன்னும் மேலான சிறந்த வார்த்தை என்பதுதான் என்கருத்து. சர்வோதயம் என்ற வார்த்தையை உபயோகிக்க நாம் அருகதையுள்ளவர்களா என்பதே எனக்குச் சந்தேகமாக விருக்கிறது. சர்வோதயம் என்ற வார்த்தையைநாம் கையாளாததாகவினோ பாஜி நம்மீது குற்றம் சாட்டினர். சர்வோதயம் என்ற வார்த்தையை உபயோகிக்க நமக்குத் தகுதி ஏற்பட்டு அதை உபயோகிக்குங் காலம் வருமென்றே நினைக்கிறேன்..."

விஞேபா பாவேயைத் திருப்திப்படுத்தவே நேரு இவ்வாறு கூறினுரே தவிர உள்ளபடியே அவருக்கு சர்வோதயத்திலோ அல்லது சோஷலிசத்திலோ துளியேனும் பற்ருே, நம்பிக்கையோ கிடையாது. அவர் முன்னுக்குப்பின் முரண்பட்ட மூர்க்கர். தனியாக உறுதியான ஓர்எண்ணமோ அல்லது அவ்வாறு ஏதேனும் தனி எண்ணம் இருந்திடும் பட்சத்தில் அதை நடைமுறையில் கொண்டுவருவதற்கானதிராணியோ அவரிடம் கிடையாது. சந்தர்ப்பங்களின் சூழ்நிலையால்நேரு பிரதம மந்திரியாக விளங்குகிருர். பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டுவெளியேறுங் கட்டத்தில், ராஜகோபாலாச்சாரியாரின் பொதுஜன செல்வாக்கற்ற தன்மை, இரும்பு மனிதன் படேலின் விட்டுக் கொடுக்கும் சுபாவம், அபுல்கலாம் ஆசாத் இந்து வாயில்லாத நிலை, சுபாஷ் சந்திரபோஸின் வெளியேற்றம், எல்லாவற்றுக்கும்மேலாக காந்தியாரின் ஆசி ஆகிய காரணங்களே சீமான் நேருவை துணைக் கண்டத்தின் பிரதம மந்திரி பதவியில் அமர்த்தின. ஆகவே தம் பதவியை இழ்ந்துவிடாமலிருக்கவும், தாம் சார்ந்துள்ள முதலாளித்வ - மதச்சார்புள்ள கட்சி தேர்தலில் வெற்றிபெற்றுக்கொண்டிருக்கவும் அவர் எதையும் பேசுவார். சில சமயங்களில் அவர் பகுத்தறிவு வாதியாகத் தோன்றுவார்; வேறு சில சமயங்களில் லெனினே ஸ்டாலினே என்று ஐயுறும் வகையில் 'சமதர்மம்' என்றும் 'வேலை செய்யவில்லையேல் உணவில்லை' என்றும் கர்ஜிப்பார், அவ்வளவும் வெறும் பேச்சு, வீண் வார்த்தை, ஜோடனை. கிரியாம்சையில் முதலாளிகளின் கைப்பாவையாய் மதவாதிகளின் கையில் மந்தியாய் எப்போதும் புன்னகை பூத்த முகத்துடன் கடமை தவருமல் விளையாடுவார்.

"சோஷலிசம் தானுக வளர வேண்டும், ஜனங்கள் அதற்கான பக்குவம் பெறவேண்டும். திடீரென ஜனங்கள்மீது சோஷலிசத்தைத் திணிப்பதற்கில்லை"-இதுவும் நேரு பெர்ஹாம்பூரில் மே 10-ல் கூறிய மணிவாசகம்தான். இதனைக் கண்டு நிச்சயம் மேல்நாட்டு ராஜதந்திரிகள் கைகொட்டிச் சிரித்திருப்பர்; இங்கு பசியாலும் பட்டினியாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் போதிய வருவாய் இல்லா குறையாலும் வாடிடும் மக்கள் சீற்றமே கொண்டிருப்பர். சோஷலிசம் வருவதற்கு ஜனங்கள் பக்குவம் பெறவேண்டுமாமே! செல்வத்திலே புரண்டு அதனுல் சோஷலிசம் இப்போது தேவையில்லை என்று சொல்லும் கூட்டத்தார் பெரும்பான்மையோராகவும் வறுமையில் வாடி சோஷலிசம் வேண்டும் என்று கூறும் கூட்டத்தார் சிறுபான்மையோராகவும் இருப்பதாக ஏதேனும் புள்ளிவிவர சேகரிப்பு இலாகா அவரிடம் அறிக்கை சமர்ப்பித்ததா? அல்லது 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்றவாறுள்ள இப்போதைய நிலை மாறி மக்கள் மக்களானுற்ருன் சோஷலிசம் புகுத்தப்படுவதற்கான பக்குவ நிலையேற்படுமென்றுமோதிலால் மைந்தர் கருதிக்கொண்டுள்ளாரா? நாட்டிலே பஞ்சைகளும் பராரிகளும் ஏழ்மையெனும் பாதாளத்திலிருந்து எழுச்சிபெற வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உள்ளபடியே இருக்குமேயானுல், குறைந்தபட்சம் சோஷலிசம் புகுத்தப்படவேண்டுமா என்பதைக் கண்டறிவதற்காக ஒரு பொதுஜன வாக்கெடுப்பு எடுப்பதற்கான முயற்சியிலாவது ஈடுபடலாமல்லவா ?

நேரு சர்வதேச ராஜதந்திரிகளின் நடுவிலே நாயகமாகத் தாமுள்ளதாக கனவு கண்டுகொண்டிருக்கிருர். உண்மையில் அவர் சர்வதேச அரசியல் அரங்கில் 'சளசள' வென்று பேசிக்கொண்டிருக்கும் பபூன். இவ்வளவு கடுமையான பதம் என் பிரயோகிக்கப்படுகின்றது தென்ருல், வேறு எவர் பிரதம மந்திரியாயிருந்திருந்தாலும் எத்தனையோ நாட்களுக்கு முன்னரே காஷ்மீர் பிரச்சினைக்கும் கோவா பிரச்சினைக்கும் ஓர் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருந்திருக்குமென்பதாலே !

நாடக மேடையிலே தோன்றிடும் ராஜா நாடகம் முடிந்ததும் வெறும் ஆசாமியாகி விடுகிருன். அதேபோல் பெர்ஹாம்பூரில் ஏராளமான பொருட்செலவில் ஏற்ட... செய்யப்பட்ட மூன்றுநாள்கூ... மக்கள் சக்தியின் எதிரிகள், ...ஞட்டை வஞ்சிக்கும் ... கூட்டத்தார் சர்வோதய ... களாக, சோஷலிச சமுத... களாக நடித்தார்கள், ... திலிருந்து போந்தசில'... கலைக்கொண்டு நாட்கம் ... அவர்கள் வேடங்கள் ...

(10-ம் ப...

ஆயிரந்தீவு அங்கயற்கண்ணி

"வேவுப் படையில் சேர்ந்தவர்களுக்கு எந்த நேரத்திலும் எந்த அபாயமும் ஏற்படலாம் என்பதை நாங்கள் அறிவோம். அதனால் இடைதுறையரானின் உத்தரவைக் கண்டு நான் அஞ்சவில்லை. இனி சிறிது எச்சரிக்கையுடனே நான் நடந்து கொள்ள வேண்டுமென்று பலரும் ஆலோசனை கூறினார்கள். பாண்டியனை வென்றதும் சோழ நாட்டுப் படைகள் கந்தளூர்ச் சாலையை நோக்கி நடந்தன. மற்றொரு பகுதிப் படை விழிஞம் என்ற சேரனுடைய கடற்கரைப் பட்டணத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. சேரனுடைய படைகள் இரு கூராகக் கப்பட்டு ஒன்று கந்தளூர்ச் சாலையிலும், மற்றொன்று விழிஞத்திலும் காத்திருந்தன.

"சோழநாட்டுப் படைகளின் வருகை எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்போதுதான் சேரனுடைய பாஸ்கர இரவிவர்மனின் தளபதி என்னுடன் ரகசிய நட்புக் கொண்டிருந்தான். என் கடைக்கண் வீச்சிலே, என் அங்க நெளிவிலே, எனது ஆடல் பாடலிலே மோகவசப்பட்டு என்னையே சுற்றிக்கொண்டு திரிந்தான். நான் அவனுடைய இன்ப வெறியை இன்னும் இன்னும் அதிகமாக்கிக் கொண்டிருந்தேன்.

"ஒரு நாள் நள்ளிரவிலே, குமரியை அடைந்த சோழனின் படைகள் கந்தளூர்ச் சாலையை நெருங்கிவிட்டன என்பதை அறிந்தேன். பாண்டியனோடு போரிட்டதிலும், நீண்ட தூரம் நடந்து வந்ததிலும் படைகள் களைத்துப் போயிருப்பதாகச் சொன்னார்கள். வேவுக்காரர்களின் நடவடிக்கையால்தான் சோழநாட்டுப் படைகள் வெற்றிக் கொடி நாட்ட முடியும் என்றும் கருதினார்கள். தளபதிக்கும் எனக்குமுள்ள உறவைக் கண்டு, அந்தப் பொறுப்பை என்னிடமே எல்லோரும் ஒப்படைத்தார்கள்.

"நான் நாள் ஒன்று குறிப்பிட்டேன். அன்று தினம் சோழநாட்டுப் படைகள் கந்தளூர்ச் சாலைக்குள் பிரவேசித்தால் வெற்றி நிச்சயம் என்றும் அறிவித்தேன். நான் குறிப்பிட்ட நாளும் வந்தது. எனது சாகசம் வெற்றி தந்தது. அன்று கந்தளூர்ச் சாலைக்கு அப்பால் நெடுந்தூரம் நானும் சேரனுடைய தளபதியும் உலாவச் சென்றிருந்தோம். எனது அழகிலே மயங்கி, அவன் உள்ளத்தை என்னிடம் பறிகொடுத்திருந்தான். ஒரு அழகான சோலையில் உட்கார்ந்தோம். என்னைக் கொஞ்சநேரம் பாடும்படி கெஞ்சினான். நான் பாடினேன். என் மடிமீது தலைவைத்துப் படுத்தான். "இப்படியே நான் என்றும் உன் மடியில் படுத்திருக்கக் கூடாதா?' என்றான். 'அதை நான் தடுக்கவில்லையே' என்றேன். என்னை அணைத்து முத்தமிட்டான், கொஞ்சினான்.

"இச்சமயத்தில் அவனது குத்துவாளை உருவினேன். 'என்?' என்று கேட்டான். 'ஒரு அருமையான ஆட்டம். அது உங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் நல்ல விருந்தாகும்' என்றேன். "எங்கே, ஆடு பார்க்கலாம்" என்றான். நான் ஆடினேன்-ஆடினேன்-ஆடிக்கொண்டேயிருந்தேன். முடிவில் எனக்கு மயக்கம் வரும்போலிருந்தது. ஓடிச் சென்று எதிர்பாராத விதமாக தளபதியின் மார்பில் குத்துவாளைச் சொருகினேன். அதுவரை மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்த தளபதி இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. 'ஆ'வென்று அலறிக் கொண்டே வீழ்ந்து உயிர்துறந்தான்.

"நான் மீண்டும் ஊரை நோக்கிச் சென்றேன். சோழ நாட்டுப் படைகளின் வருகையை அறிவித்தேன். படையினர் தளபதியைத் தேடினார்கள். அவர் சோழவீரன் ஒருவனால் குத்தப்பட்டு இறந்ததாகச் சொன்னேன். உடனே எல்லோரும் ஓடத் தலைப்பட்டனர். சேரன் படையினர் எந்தப் பகுதியில் பின்வாங்கி ஓடினார்களோ, அதே பகுதியில் தான் சோழப் படைகள் நடைபோட்டு முன்னேறின. எதிரே வரும் எதிரியின் படைகளைக் கண்ட சேரன் படைகள் நிபந்தனையின்றிச் சரணடைந்தன.

"இது சோழநாட்டுப் படைவீரர்களுக்குப் பெருவியப்பை யளித்தது. நடந்ததையெல்லாம் நமது படைவீரர்களுக்கு அறிவித்தேன். அவர்கள் என் துணிச்சலையும் வீரத்தையும் பாராட்டினார்கள். பின்னர் கந்தளூர்ச் சாலையைக் கைப்பற்றிக் கொண்டு முன்னேறினோம். விழிஞத்திலே ஒரு பகுதிப் படையும் சேரநாட்டு மரக்கலப் படையும் காத்து நின்றன. அங்கேதான் பெரும் போர் நடைபெற்றது. ஆனால் சிறு பகுதியான சேரனின் படைகள், கடல்போன்ற நமது படைகளை எதிர்க்கமுடியாமல் தோல்வியடைந்தன. சேரனுடைய கடற்படை முழுதும் அழிக்கப்பட்டது. அச்சமயம் தான் ஆயிரந்தீவுகளையும் நான் பார்க்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

"விழிஞத்திலே தங்கியிருந்த சேரனின் படைத் தளபதி திடீரென்று காணாமற்போய் விட்டான். கப்பற் படையை கைப்பற்றும்போது பல படகுகளும் இரண்டொரு மரக்கலங்களும் கடலுக்குள் சென்று மறைந்துவிட்டன. அத்தளபதி ஒருவேளை அந்த மரக்கலங்களிலே சென்று மறைந்திருப்பானோ என்று சந்தேகப்பட்டனர். அதனால் பலம் பொருந்திய ஒரு படையுடன் சேரனுடைய மரக்கலங்களிலேயே நாங்கள் பிரயாணம் செய்து தளபதியைத் தேடினோம்.

"திடீரென நாங்கள் சில தீவுகளைக் கண்டோம். அதுதான் பழந்தீவு பன்னீராயிரம் என்றும், ஆயிரந்தீவுகள் என்றும் அழைப்பதுண்டு என்றும் சொன்னார்கள். நாங்கள் போய் இறங்கிய தீவுதான் எல்லாத் தீவுகளையும் விட மிகப் பெரியதென்றும், அதற்குச் சாந்திமத்தீவு என்று பெயர் என்றும் கூறினார்கள். இத்தீவு பராந்தகன் காலம் முதல் சோழ நாட்டின் ஆட்சிக்குட்பட்டதென்றும், தற்சமயம் அங்கே யாரும் ஆட்சி செய்யவில்லையென்றும், மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்துகொள்கிறார்களென்றும் சொல்லிக் கொண்டார்கள்.

"நாங்கள் சில தினங்கள் அங்கேயே தங்கி சுற்றிப் பார்த்தபிறகு, மீண்டும் புறப்பட்டு சோழநாட்டை அடைந்தோம். அச்சமயம் தான் உங்கள் தந்தையின் விருப்பப்படி நீங்கள் கொங்கணம், குடகு முதலிய பகுதிகளைக் கைப்பற்ற பெரும் படையுடன் சென்றிருப்பதாக அறிந்தேன். நான் தஞ்சையை அடைந்ததும் நந்தினியை அழைத்துவரும்படி கூறினேன். ஆனால் என் கணவர் என்னைக் கடைசியாக ஒருமுறை நேரில் பார்த்துப் பேச ஆசைப்படுவதாகக் கூறினார்கள். என் நினைவினாலும், குடும்பத்தின் சீரழிவினாலும், அவருடைய நோய் அதிகரித்து விட்டதாகவும் சொன்னார்கள். எனக்கும் அவரைப் பார்க்க ஆசைதான். ஆனால் அவருடைய மனைவி என்ற முறையில் அவரை எப்படிச் சென்று பார்ப்பது?

"மனவேதனை ஒரு புறம்; அன்புக் கணவரையும் அருமைச் செல்வியையும் பார்க்கப் போகிறோம் என்ற ஆனந்தம் ஒரு புறம்; இம்மாதிரி நிலையில்தான் என் வீடு--இல்லை?-- என் கணவரின் வீட்டிற்கு அன்று இரவு சென்றேன். படுக்கையில் படுத்துக் கிடந்த என் கணவர் என்னைக் கண்டதும் 'கயல்விழி' என்று கூவினார். நான் அவர் அருகில் ஓடினேன். அவர் பாதங்களில் வீழ்ந்தேன். அழுது பொருமினேன். நானும் கண்ணீர் விட்டேன். இருவரும் சிறிதுநேரம் பேசவே முடியவில்லை. என் மகள் நந்தினி என் கணவரின் அருகில் நின்று கொண்டு என்னையும் என் கணவரையும் மாறி மாறிப் பார்த்தாள். என் அருகில் வரும்படி அவளை அழைத்தேன். அவளும் அழுவது போல் பாசாங்குசெய்துகொண்டு, வர மறுத்துவிட்டாள். இதைப் பார்த்ததும் என் கணவர் முதலில் பேச ஆரம்பித்தார். "கயல்விழி! நந்தினியைப் பார்! அவள் கூட அம்மாவை வெறுத்துவிட்டாள்!" என்றார். என்னால் எதுவும் பேச முடியவில்லை. கண்ணீர் வடித்தபடியே உட்கார்ந்திருந்தேன்.

"திடீரெனப் பெரும் ஓசை வீதிப் புறம் கேட்டது. எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பினோம். இரு வீரர்கள் பரபரப்புடன் உள்ளே நுழைந்தனர். நான் திடுக்கிட்டு எழுந்தேன். அந்த இரு வீரர்களும் முகமூடி அணிந்தபடி என்னருகில் வந்தனர். என்ன நடக்கப்போகிறது என்பதை உடனே நான் புரிந்துகொண்டேன். கூச்சலிட்டுக் கொண்டே வீட்டின் மற்றொருபுறம் ஓடினேன். அந்த இரு வீரர்களும் பாய்ந்து என்னைப் பிடித்தனர். ஒருவன் என் வாயைப் பொத்தினான். என் கூச்சல் அடங்கியது. அந்த இரு முரடர்களும் என்னைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தனர். என் கணவர் "கயல்விழி! கயல்விழி!" என்று கத்தியதைக் கேட்டேன். நந்தினி "அம்மா! அம்மா!" என்று அலறுவதைக் கேட்டேன். ஆனால் நான் என்ன செய்யமுடியும்? செயலற்றவளானேன்.

ஒரு முரட்டு வீரன் அவனுடைய குதிரைமீது என்னை ஏற்றி தானும்

ஏறி உட்கார்ந்து கொண்டான். உடனே அக்குதிரை பறந்தது. மறு நாள் பொழுது புலரும் வரையில் எங்கள் குதிரை ஓடிக்கொண்டே தானிருந்தது. நான் மிகவும் களைத்துப் போயிருந்தேன். பிறகு என்ன நடந்தது என்பதே எனக்குத் தெரியாது.

நான் கண் விழிக்கும்போது ஒரு பெரிய மாளிகையில் படுத்திருப்பதை அறிந்தேன். என்னைச் சுற்றிச் சில வீரர்கள் காவலிருந்தனர். சிறிது நேரத்தில் இடைதுறை நாட்டுத் தளபதியும், இடைதுறை மன்னனும் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் சுற்றி நின்ற வீரர்கள் வெளியே சென்றுவிட்டனர். இடைதுறையானின் கையில் முட்கள் நிறைந்த சாட்டை இருந்தது. எனக்கு முன்னால் நின்றுகொண்டு சாட்டையை வீசினான் இடைதுறையான். அந்தச் சாட்டை பக்கத்திலிருந்த சுவற்றில் பதிந்து அதில் பூசப்பட்டிருந்த சுண்ணாம்புக் காரைகளைப் பெயர்த்தெறிந்தது. இடைதுறையான் கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன. அவனுடைய நிலையும் செய்கையும் கண்டு என் உடல் நடுங்கியது.

''‘ஊம் எழுந்திரு’ என்றான் இடைதுறையான். நான் நடுங்கிக் கொண்டே எழுந்தேன். ‘உண்மையைச் சொல். எங்கே உனது ஆட்கள்? எல்லோரையும் என்னிடம் காட்டிக் கொடுக்கவேண்டும். முதலில் யார் யார், எங்கெங்கே இருக்கிறார்கள் என்று சொல்'' என்றான். நான் பதில் பேசவே இல்லை. வாயடைத்து நின்றேன். ''சொல்கிறாயா இல்லையா?'' என்று சாட்டையை ஓங்கினான். நான் மௌனமாகவே நின்றேன். அதற்குள் என் மனம் உறுதிபெற்றது. எவ்வளவு கஷ்டமும், துன்பமும் நேர்ந்தாலும் நண்பர்களையும் தாயகத்தையும் காட்டிக் கொடுப்பதில்லை என்று முடிவு செய்தேன். அதற்காக உயிரையும் இழக்கச் சித்தமாகி விட்டேன்.

''என்னை அடிப்பதினாலோ, துன்புறுத்துவதினாலோ என்னிடமிருந்து நீங்கள் எந்தச் செய்தியையும் பெற்றுவிட முடியாது!'' என்றேன். ''நீ துணிச்சல்காரி! பரத்தை! எதற்கும் துணிந்துவிட்டவள். தமிழ்நாட்டுப் பெண்கள் கற்பில் சிறந்தவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கு நேர் மாறானவள் நீ'' என்றான் இடைதுறையான். ‘நீயும் அப்படித்தான். மனைவியைத் தவிர மற்றவர்களைச் சகோதரிகளாகவும் தாய்மார்களாகவும் கருதும் பண்பு தமிழருக்கு உண்டு. நீ?...என்னைக் கண்டதும் கற்பைச் சூறையாடி விட்டாய்! அதற்காக உன் தளபதியையே ஏமாற்றினாய். அன்று இரவே பஞ்சணையில் உன்னைக் கொன்று பழி தீர்த்துக்கொள்ள நினைத்தேன். ஆனால் உன்னைத் தூக்கத்தில் வஞ்சகமாகக் கொல்ல விரும்பவில்லை. அதனால்தான் நீ தப்பிப் பிழைத்தாய்'' என்றேன்.

''அடி வஞ்சகி! சண்டாளி!'' என்றான். ஓங்கிய சாட்டை என் மீது பட்டது. பல முட்கள் எனது உடையை மட்டும் கிழித்தன. சில முட்கள் என் உடலின் மீது பட்டு சதையையும் பெயர்த்தன. குருதி பொங்கி வழிந்தது. ‘அம்மா’ என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தேன்.

''என் நினைவு திரும்பும்போது விழித்துப் பார்த்தேன். இடைதுறை நாட்டில் தற்சமயம் இளவரசருடன் தங்கியிருக்கும் இன்பவல்லியின் மாளிகையிலே நான் சிறைவைக்கப் பட்டிருந்தேன். இன்பவல்லியின் பெற்றோர் எனக்குப் பாதுகாவலராக நியமிக்கப்பட்டனர். அவர்கள் என்னைத் துன்புறுத்தி, ரகசியங்களைத் தெரிந்துகொள்ள முயன்றனர். நான் எதையும் வெளியிட மறுத்தேன். என் உடலில் உள்ள புண்கள்மீது மருந்து தடவி கட்டப் பட்டிருந்தது. எழுந்தாலும், உட்கார்ந்தாலும், புரண்டு படுத்தாலும் காயங்களின் வேதனையால் கஷ்டப் பட்டேன். சில சமயங்களில் இடைதுறையானே நேரில் வருவான். அவன் வருகையை அறிந்ததும் மூர்ச்சித்துக் கிடப்பவள்போல் பாசாங்கு செய்வேன். என் உடற்காயங்கள் ஆறும் வரை என்னைத் துன்புறுத்த வேண்டாமென்றும், என்னைப் பத்திரமாகப் பாதுகாக்கும்படியும் சொல்லிச் சென்றான்.

''எனது காயங்கள் குணமாகிக் கொண்டு வந்தன. ஆனால் இன்னும் அதிக வலி இருப்பதுபோல் நான் நடித்து வந்தேன். இரவில் எல்லோரும் தூங்கும்போது எழுந்து மெதுவாக நடந்து பார்ப்பேன். தப்பிச் செல்ல வழியிருக்கிறதாவென்றும் ஆராய்வேன். ஒரு நாள் நடு நிசியில் எழுந்தேன். பக்கத்திலே தொங்கிய கறுப்புத் திரையை எடுத்து என்மீது போர்த்திக் கொண்டேன். நிலா முற்றத்தின் வழியாக அடுத்த வீட்டின் கூரைக்குத் தாவினேன். அங்கிருந்து ஓங்கி வளர்ந்த ஒரு மரத்தின் கிளையில் ஏறி, மரத்தின் வழியாகக் கீழே யிறங்கினேன். நல்ல வேளையாக என்னை யாரும் பார்க்கவில்லை.

''மிகவும் துணிச்சலுடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தேன். ஆள் வரும் ஓசை கேட்டால் மூலைகளில் பதுங்கிக் கொள்வேன். நான் போர்த்தியிருந்த கறுப்பு ஆடையால் நகரக் காவலர்களிடமிருந்து அன்று இபவு தப்பினேன். மறுநாள் பொழுது புலர்வதற்குள் இடைதுறை நகரைவிட்டு நீண்டதூரம் வந்துவிட்டேன். இனி நான் என்ன செய்வது? வடக்கே சென்றாலும் ஆபத்து. தெற்கே சோழ நாட்டிற்குச் செல்லலாம். ஆனால் என்மீது பாண்டியன், சேரன், சளுக்கன், இடைதுறையான் எல்லோருமே கண்வைத்திருக்கின்றனர். நிம்மதியாக என்னைச் சோழநாட்டிலே வாழ விடமாட்டார்கள். அப்படி வாழ நேரிட்டாலும், குடும்பம், கணவன், மகள் எல்லோரையும் துறந்து வரண்ட வாழ்வு நடத்த முடியாது. அதிலும் மானமிழந்தபின் மதிப்புடன் வாழ மனம் இடம் தராது. இனி தற்கொலை தான் முடிவு. சுலபமான வழிதான். ஆனால் என் மானத்தைக் கெடுத்த--கற்பைச் சூறையாடிய கயவனை--என் வாழ்வைக் கெடுத்த வஞ்சகனை--என்னை முள் சாட்டையால் அடித்துத் துன்புறுத்திய துன்மார்க்கனைப் பழிக்குப் பழி வாங்காமல் விடுவதில்லை என்று தீர்மானித்தேன்.

இச்சமயம் சுமார் பதினைந்து பேர்கள், ஆண்களும் பெண்களுமடங்கிய ஒரு கூட்டம் ராசபாட்டையில் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் ஒரு புதருக்குப் பக்கத்தில் மறைந்து கொண்டேன். ஆனால் அவர்கள் பேசிக்கொண்டு சென்ற மொழி எனக்குச் சிறிது தைரியத்தை வரவழைத்தது. அவர்கள் தமிழில்தான் பேசிக்கொண்டு சென்றார்கள். உடனே நான் மறைவிலிருந்து வெளியே வந்தேன். என்னைக் கண்டதும் எல்லோருமே முதலில் பயந்துவிட்டார்கள். நான் போர்த்தியிருந்த கறுப்பு ஆடையை நீக்கினேன். எல்லோரும் என்னை உற்றுப் பார்த்தார்கள். அதில் ஒரு பெண் ''ஆ! கயல்விழியா?'' என்றாள். ''ஆம்! என்னைத் தெரியுமா?'' என்று கேட்டேன். ''இன்று சோழப் பேரரசு வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறதென்றால், இராசராசரும், இராசேந்திரரும் சென்ற இடமெல்லாம் புலிக்கொடியை நாட்டி வருகிறார்களென்றால் அதற்கு நீதானே காரணம்!'' என்றாள். எல்லோரும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

''இங்கே தனியாக நீ என்ன செய்கிறாய்?'' என்று கேட்டாள் அந்தப் பெண். நான் நடந்த விபரங்களைத் தெரிவித்தேன். ''இன்னும் கொஞ்சநேரம் இங்கே தாமதித்தாலும் இடைதுறையானின் படைகள் என்னைத் தேடி வந்துவிடும்'' என்றேன். அந்தக் கூட்டத்தினர் அனைவரும் மேலைச்சளுக்க நாட்டில் ஒற்றர்களாகப் பணிபுரிந்தவர்கள். என்னுடைய சாகசச் செயல்களைக் கேட்டு அறிந்தவர்கள். சிலர் என்னைப் பார்த்துமிருக்கிறார்கள். எனக்கு நேர்ந்த துன்பங்களையும் துயரங்களையும் கேட்டுத் துடிதுடித்தார்கள். மிகவும் வருந்தினார்கள். எல்லோரும் அந்த ராசபாட்டையில் சென்றால் ஆபத்து என்பதை அறிந்தோம். என் ஆலோசனையின்படி எல்லோரும் நடக்க ஒப்புக்கொண்டார்கள்.

''நாங்கள் இடைதுறை நாட்டின் எல்லை ஓரமாகக் கீழ்க்கடற்கரையை அடைந்தோம். என்னோடு வந்தவர்கள் சோழநாட்டிற்குச் செல்லவே ஆசைப்பட்டார்கள். ஆனால் என்னைவிட்டுப் பிரிந்து செல்லவும் மனமின்றித் தயங்கினார்கள். அப்போதுதான் எனக்குச் சில திட்டமான எண்ணங்கள் தோன்றின. ஒருவரும் ஆட்சி செய்யாத--யாருக்கும் அடிமையாகாத ஆயிரந்தீவுகளுக்குச் சென்றுவிட்டால் என்ன? அங்கே தங்கியிருந்து, இடைதுறை நாட்டில் உளவு அறிந்து, சோழ மன்னருக்குத் தெரிவித்து, இடைதுறை நாட்டைக் கைப்பற்றச் செய்ய வேண்டும்.

அதே சமயத்தில் இடைதுறையானால் சோழநாட்டிற்கு ஆபத்து ஏற்படாமலும் பாதுகாக்கவேண்டும். ஆயிரந்தீவுகளில் தங்கியிருந்தால் எனக்கும் ஆபத்து ஏற்படாது என்றெல்லாம் தீர்மானித்தேன். என்னோடு வரவும், சோழநாட்டின் நன்மைக்காக எந்தக் காரியத்தைச் செய்யவும் எல்லோரும் மனமொப்பினர்.

''பிறகு எல்லோரும் ஈழத்திற்குப் புறப்பட்ட ஒரு பெரிய படகில் பிரயாணம் செய்தோம். ஈழத்தை அடைந்ததும் அங்கிருந்து மாலத்தீவு, பவளத்தீவு, கோமளத்தீவு,

எல்லாம் கடந்து சாந்திமத்தீவை அடைந்தோம். நான் முன்பு ஒரு தடவை சாந்திமத்தீவுக்கு வந்திருக்கிறேன். அங்குள்ள குடிகளில் பெரும்பாலோர் தமிழர் - அதுவும் சோழநாட்டு மக்கள்தான். பலர் சோழநாட்டுடன் கொள்வினை, கொடுப்பினை சம்பந்தங்களும் வைத்துக்கொண்டிருந்தார்கள். இவையெல்லாம் நான் எடுத்துக்கொண்ட வேலைக்கு ஆக்கமளிப்பதாயிருந்தன.

" ஆயிரந்தீவுகளில் ஒரு சிறு படையொன்று திரட்டினேன். முக்கியமான பாதுகாப்பு வேலைகள் தவிர, மற்ற எல்லா வேலைகளுக்கும் பெண்களையே நியமனம் செய்தேன். வலுவான ஒரு ஒற்றர் குழுவை அமைத்தேன். திறமை மிக்க ஆடவர்களையும், சிறந்த பெண்களையும் நியமித்தேன். இக்குழுவினர் இடைதுறை நாட்டிற்கும் சோழநாட்டிற்குமிடையே உள்ள மிகப்பெரிய காடான ஆலங்காட்டில் தங்கி, இடைதுறை நாட்டில் உளவு அறியவேண்டுமென்று கட்டளையிட்டேன். வாரமொரு முறையும், முக்கிய செய்திகள் கிடைத்தால் அவ்வப்போதும் எனக்கு அறிவிக்கும்படி உத்தரவிட்டேன். அத்துடன் மிக முக்கியமான வேலையொன்றும் செய்யும்படி அந்தக் குழுவினருக்குப் பணித்தேன்.

" என்னிடம் பல சாகசச் செயல்களைக் கற்று, சோழநாட்டின் நன்மைக்காக தங்களை அர்ப்பணிக்க, சாந்திமத்தீவிலே பல பெண்கள் முன்வந்தனர்- அவர்கள் சோழநாட்டில் புகுந்து, இளம்பெண்கள் பலரைக் கடத்திவரஉத்தரவிட்டேன். ஆர்வம் படைத்த ஆண் பெண் பலர் என் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, என் ஆணையை நிறைவேற்றச் சித்தமாயினர். ஆனால் நான் யார்? எதற்காக இந்த வேலைகளை மேற்கொண்டேன் என்பது பலருக்குத் தெரியாது. பலர் என்னைச் சோழநாட்டின் அரசி என்றும், சிலர் நான் சோழநாட்டின் அரச குடும்பத்தைச் சார்ந்தவளென்றும் சொல்லிக்கொண்டார்கள். சோழ சிங்காதனத்துக்கோ, அரச குடும்பத்துக்கோ என்னால் இழுக்கு ஏற்படக்கூடாது என்று எண்ணினேன். நான் சோழநாட்டின் பெருங்குடி மக்களில் ஒருத்தி என்றும், சோழநாட்டின் நன்மைக்காகவே இப்பணியை மேற்கொண்டதாகவும் அரச குடும்பத்துடன் என்னைச் சம்பந்தப்படுத்த வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டேன்.

" ஆனால் மக்களின் உள்ளத்திலே நான் ஒரு தலைவியாகக் கருதப்பட்டேன். என்னைத் தலைவியாக ஏற்றுக்கொண்ட அனைவரும் அந்தத் தலைமைப் பீடத்திலிருந்து, என்னைத் தாழ்த்திவிட விரும்பலை. நான் என்றென்றும் அவர்ன் தலைவியாக-தாயாக-அன்னை அழைக்கப்பட்டேன். பிறகு 'அன்னை' என்று எல்லோரும் தனர். அதன் பிறகு எனது சேர்ந்தவர்கள் அனை அன்னை' என்பதை ஒரு ரமாக உச்சரித்தனர். வேற்ற எடுத்துக்கொள்ளும் சபதங்களிலும், போர்களிலும், துன்பம், துயரம் சூழ்ந்த போதும் 'அன்னை வாழ்க' என்று உச்சரித்து கடமையை நிறைவேற்றினர். அதன் பிறகு நான் எல்லோருக்கும் அன்னையானேன்.

என் திட்டப்படி வேலைகள் நன்கு நடைபெற்றன. சோழநாட்டிலிருந்து கடத்திவரப்பட்ட பல பெண்களில், கமலினி, மங்கை, நந்தினி, கோதை, தங்கம் போன்ற பெண்கள் விரைவிலேயே பயிற்சியும் தகுதியும் பெற்று எனக்கு அடுத்தபடியாக எல்லா வேலைகளையும் கவனித்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றனர்.

" ஆலங்காட்டில் தங்கிய எனது படை முதலில் ஒரு மாபெரும் சுரங்க வீடு அமைத்துக்கொண்டது. சமீபத்தில் தாங்களும் தளபதி தளநாயக்கரும் இடைதுறை நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற போதுகூட என் படையினர் கண்களுக்கு நீங்கள் தப்பவில்லையென்று கேள்வியுற்றேன். நீங்கள் இருவரும் அந்த சுரங்க வீட்டைப் பார்வையிட்டதாகவும் அறிந்தேன். எங்கள் வேலை முடிந்து, ஆலங்காட்டிலிருந்து ஆயிரம்தீவுக்குப் படை புறப்பட்டதும் அந்தச் சுரங்க வீட்டை என் படையினரே அழித்துவிட்டனர்.

நான் ஆயிரந்தீவை அடைந்த மறு ஆண்டில் தங்கமும், கோதையும் தஞ்சையிலிருந்து கடத்திவரப்பட்டனர். இருவருக்கும் அப்போது வயது பதினொன்று, பன்னிரெண்டு இருக்கும். அவர்களின் மூலம் பயங்கரமான ஒரு புதிய வழியைக் கடைப்பிடிக்கவும் தீர்மானித்தேன். இருவரும் சாப்பிடும் ஆகாரங்களில் சிறிது சிறிதாக, ஆனால் உயிருக்கு ஆபத்து ஏற்படாத நிலையில் நஞ்சு கலந்து கொடுத்து வந்தேன். நாளாக ஆக நஞ்சின் அளவை அதிகரித்து வந்தேன். இரண்டாண்டுகளில் தங்கமும் கோதையும் பருவமடைந்தனர்.

இவ்விரு பெண்களையும் யாரும் தீண்டக்கூடாதென்றும் அதனால் உயிருக்கு ஆபத்து என்றும் அறிவித்தேன். என் திட்டம் சரியாக நிறைவேறியிருக்கிறதா என்பதைப் பார்க்க இரு விஷப் பாம்புகளைக் கொண்டுவரச் செய்தேன். தங்கமும், கோதையும் தூங்கிக்கொண்டிருக்கும்போது பாம்புகளைவிட்டு அவர்களைக் கடிக்கச் செய்தேன்.

பாம்புகள் கடித்ததும் இருபெண்களும் விழித்துக்கொண்டனர். பாம்புகளைப் பார்த்ததும் அலறித் துடித்தனர். ஆனால் அவர்களுக்கு யாதொரு தீங்கும் ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக, சிறிது நேரத்தில் தங்கத்தையும், கோதையையும் கடித்த பாம்புகள் சுருண்டு, வளைந்து, நெளிந்து, துடித்துக் கொண்டே இறந்து வீழ்ந்தன. நான் அதைப் பார்த்து மகிழ்ச்சியுற்றேன். என் பரிசோதனை வெற்றி பெற்றது. அங்கு நின்ற எல்லோரும் ஆச்சரியத்தால் வாயடைத்துப்போயினர்.

தொடரும்

அந்தச் சட்டம்!

கிரேக்க நாட்டு வரலாற்றில் . . .

கி. மு. 508-507! நாகரீகத்தில் நடுநாயகமாக விளங்கிய நாடுகளிலொன்றாக கிரேக்க நாடு இருந்த காலம். அவ்வாண்டில், ஏதென்ஸ் குடியரசிற்கு புதுவிதமான பாதுகாப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டது. தேசத்துரோகிகளால் நாடு நாசமாகாமலிருக்கவே அச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

குடியாட்சிக்கு வேண்டிய ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கும்உரிமை பெற்றிருந்ததோடு மட்டுமல்லாமல் குடியாட்சிக்கு விரோதமாக பதவி வகிப்பவர்களை நீக்கிவிடவும் கிரேக்கர்கள் உரிமை பெற்றனர். இச்சட்டத்தின்மூலம். இவ்வுரிமைப்படி நல்லவர்களை பதவியிலமர்த்தவும் அல்லாத துரோகிகளை அகற்றவும் ஏதென்ஸ் நாட்டார் அதிகாரம் பெற்றிருந்தனர்.

குடியாட்சிக் காலத்தில் ஒவ்வொரு வருடத்தின் ஆறுவது மாதத்திலும் 'யாராவது பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமா?' என ஆட்சிசெய்யும் இருவித சபைகள் ஆராயும். 'துரோகிகளால் நாட்டின் குடியாட்சிக்கு ஆபத்து வர இருக்கிறது; எனவே, யார் துரோகி என தீர்மானிக்கப்படுகிறார்களோ அவரை நீக்கிவிடவேண்டும்' என இரு சபைகளும் கருதினால் உடனே மக்கள் மன்றத்திற்கு செய்தி அறிவிக்கப்படும். அறிக்கைப்படி மக்கள் ஓரிடத்தில் கூடுவர். யாரை துரோகி என கருதுகிறார்களோ, அவரின் பெயரை குறித்து ஓட்டுச் செய்வர். யார் தனக்கு எதிராக 6000 ஓட்டுக்கள் பெறுகிறார்களோ அவர்கள் 10 வருட காலத்திற்கு நாடு கடத்தப்படுவார்கள். அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். இவ்விதம் தேர்தல்மூலம் பதவியலமர்த்தப்பட்டுபின்பு துரோகச் செயலை ஆராய்ந்து, பதவியை விட்டுவிரட்டுவதற்குப் பெயர்தான், "ஆஸ்டரகிசம்" என்பது. பதவியிலிருந்து விலக்குவது என்பதுதான் இதன் பொருள். இந்த நாடு கடத்தல் முறையைக் கொணர்ந்தவர் ஏதென்ஸ் குடியாட்சியை நிலைநாட்டிய நல்லவர் கிளைஸ்தனீஸ் என்பவரேயாகும்.

"ஆஸ்ட்ரகிஸம்" சட்டமாக்கப்பட்டது. திரைமறைவில் தேசத்துரோகிகளாக திரிந்துகொண்டிருந்தவர்கள், பதவி வகிக்கு முன்பு பண்புள்ளவர்களாகவும் பதவியேற்றபின் பண்பிழந்தவர்களாகவும் மாறியவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டனர். பழிவாங்கப்பட்டனர். அவர்களில் சிலர் இங்கு இழுத்துவந்து நிறுத்தப்படுகின்றனர். அத்தேசத் துரோகிகளையும் நம்நாட்டு தேசத்துரோகிகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஏதென்ஸ் துரோகிகள் தண்டிக்கப்பட்டனர் அந்நாட்டு மக்களால். ஆனால் நம்மிடத்தில் "ஆஸ்ட்ரகிஸம்" இல்லையே!

இதோ ஓர் தேசத்துரோகி! அரிஸ்டைடீஸ்! நீதிவழுவாதவன்; நெறிமுறையினன்; மனிதப் பண்பு மிக்கவன்; எல்லோராலும் நீதிமான் என அழைக்கப்பட்டவன். பதவிவகிக்கு முன்பு இவ்வாறாக கருதப்பட்ட அரிஸ்டைடீஸ் பதவியேற்றபின் நாட்டுமக்களுக்கு ஏற்றபடி நடக்கவில்லை. மக்கள் மன்றம் 'துரோகி'யென கருதும் அளவிற்கு நடந்துகொண்டான். எனவே, கி. மு. 482-ல் நாடு கடத்தப்பட்டான். நல்லவனாக இருந்ததைக் கூட நினையாது நீக்கப்பட்டான். ஆனால், நம் தாயகத்தில்? கொடுமையின் கூடாரமாக இருக்கும் கொடுங்கோலர்கள் எவ்வளவு பெரிய துரோகத்தை செய்தும் நல்லவர்களென வேடம்போடுகிறார்கள்.

"தெமிஸ்டாகிளீஸ்" என்று பெயர் சூட்டப்பெற்ற இவனும் ஏதென்ஸ் சரித்திரத்தில் துரோகி என கருதப்பட்டு துரத்தியடிக்கப்பட்டவன். "மிக்சிறந்த அரசியல் நிபுணன், ராஜதந்திரி, திறமைசாலி" என்றெல்லாம் ஏற்றிப் போற்றப்பட்டவன். ஏதென்ஸ் கப்பற்படையை மிகவும் பலவாய்ந்ததாக ஆக்கிய பெருமை இவனையே சாரும். ஏதென்ஸ் வெற்றிக்கு காரணமானவன். ஆனால் மனிதப் பண்பில்லை அவனிடம். ஆடம்பரப் பிரியன், சதா தற்புகழ்ச்சியால் பூரிப்பவன். சதி செய்வதில் மகா சமர்த்தன். பலாத்காரத்தை தூண்டக் கூடியவன் சுருங்கச் சொன்னால் இவன் கிரேக்க நாட்டு ஆச்சாரியார். இவன் கி. மு. 472-ல் நாடு கடத்தப்பட்டான். தேசத்துரோகிதெமிஸ்டாகிளீஸ்-ஏதென்ஸ் ஆச்சாரியார்-அன்று அங்கு அவ்வாறு தண்டிக்கப்பட்டான். ஆனால், இங்கு அத்தகையோர் இன்னும் பவனி வருகிறார்களே!

"கைமன்" என்ற படைத்தளபதியும் ஏதென்ஸின் தேசத்துரோகி என தண்டிக்கப்பட்டவன். ஆஸ்ட்ரகிஸம் இவனை பலிவாங்கிவிட்டது. இவன் பிரபுக்கள் நலனுக்காக பாடுபட்டவன். ஆசியாவில் வாழ்ந்த கிரேக்கர்களை பாரசீக ஆட்சிக் கொடுமையிலிருந்து விடுவித்த வீரன். அண்டை நாடான 'ஸ்பார்ட்டா' என்ற மற்றொரு கிரேக்க நாட்டினுடன் இவன் நட்புறவு கொண்டவன். தன் தேசத்திற்கு எதிராக அந்நாட்டினோடு நட்புறவு கொண்டவன். எனவே இவனும் 'தேசத்துரோகி' என தீர்மானிக்கப்பட்டு, கி. மு. 461-ல் தண்டிக்கப்பட்டான்.

படைத்தளபதியாகவும் பண்டைய கிரேக்க சரித்திர ஆசிரியராகவும் விளங்கிய 'தூசிடிட்ஸ்' என்பவனும் கி. மு. 442-ல் தண்டிக்கப்பட்டான். நாடு கடத்தப்பட்டான். தேசத்துரோகியாக கருதப்பட்டான். அவன் ஆசிரியன் எனும் மதிப்பையுமிழந்தான்.

இவ்விதம் அன்றைய ஏதென்ஸ் தனது தேசத்துரோகிகளை தண்டித்தது. பற்பலர் 'ஆஸ்ட்ரகிஸ' சட்டத்திற்கு பலியிடப்பட்டனர்.

தென்னகமாம் திராவிடத்தை வடநாட்டு டில்லிக்கும், டாடா-பனியா கும்பலுக்கும் பார்ப்பனீயத்திற்கும் அடிமையாக்கியது மட்டுமல்லாமல், அடிமைத்தளையை அறுக்கவெட்டாமல் தடுத்து வருகிற கூட்டத்தை நசுக்க ஏதென்ஸ் சட்டம் போன்ற உரிமைச் சட்டம் இருந்திருந்தால் மாணிக்கவேலர்களையும், ராமசாமிப்படையாச்சிகளையும் இன்றைய சென்னை அரசுபீடம் தாங்கிக்கொண்டா இருக்கும்!

—ச. செல்லப்பாண்டியன்.

சிலம்பு விளைந்த செல்வம்

தமிழ் வாழ்க !

தமிழ் இலக்கியமாகியமேட்டுநிலத்திலே சங்க கால இலக்கியம் ஒரு பாரிய மலைத்தொடர். அதன் உயர மிக்க கொடுமுடிகள் திருக்குறளும், தொல்காப்பியமும், சிலப்பதிகாரமுமே ஆகும். திருக்குறளையும் தொல்காப்பியத்தையும் விடச் சிலப்பதிகாரக் கொடுமுடி உயரம் குறைந்ததேயானாலும், அவற்றில் தவழாத முத்தமிழ் "மாமுகில்"கள் அதில் தவழ்கின்றன. தவிர அதன் பாறைகள் திருக்குறள் தொல்காப்பிய கொடுமுடிகளைத் தாண்டி உயர்ந்து நின்ற பல பெருங் கொடுமுடிகளின் சின்னங்களைத் தம்மகத்தே கொண்டுள்ளன. மின்புயல்களால் சிதறுண்ட அக் கொடுமுடிகள் தலை சாய்ந்து, உயரத்தில் சற்றுக் குறைந்தாலும் பண்பில் மற்றைய எல்லாக் கொடுமுடிகளையும் விட உயர்வு உடையதாகக் காணப்படுகிறது. சிலம்புச் செல்வத்தில் இச்சீரிய வளப்பத்தை தமிழிசை இயக்க காலத்திலிருந்து தமிழகம் உணரத் தலைப்பட்டுள்ளது. ஆயினும் முழுச்சிறப்பையும் தமிழகம் இன்னும் உணரவில்லை. வருங்காலம் அதை உணர்விக்கவல்லது எனலாம்.

தனித்தமிழ் இயக்கம்

மறைமலை அடிகளால் சங்க இலக்கியத்தில் கருத்துச் செலுத்தி, மாணவரிடையேயும், மக்களிடையேயும் அவற்றின் இயற்கை வழுவாத கலைப் பண்பின் ஒளி பரப்பினர். அவரது முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி ஆகிய தெள்ளிய தீந்தமிழ் ஆராய்ச்சி நூல்களும் அவற்றுடன் தொடர்புடைய சாகுந்தள ஆராய்ச்சியும் மாணவர் உலகில் கவிதை பற்றிய எண்ணங்களில் புரட்சி தூண்டின. அத்துடன் சமயத் துறையில் அவர் ஆரிய மத மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் பகுத்தறிவு ஒளி பரப்பினர். சாதிக் கருத்துக்களைப் பரப்பும் பிற்கால ஏடுகள் அனைத்தையும் -- அவை சைவ ஏடுகளாக இருந்தால் கூட-- அவர் சாடினர். ஆனல் இவற்றுலெல்லாம் மொழி உணர்ச்சி, அறிவு மலர்ச்சி ஏற்பட்டதே யொழியக் கலைமலர்ச்சி ஏற்படவில்லை.

அடிகள் சமயவாணராகவும் கலைஞராகவும் அறிஞராகவும் விளங்கினர். ஆனல் அறிவே மூன்றிலும் முனைப்பாய் இருந்தது. கலை அவர் உள்ளத்தில் இரண்டாம் இடமே பெற்றது. எனவேதான் தனித்தமிழ் இயக்கத் தந்தையாகிய அவர் மறுமலர்ச்சிக்குத் தூண்டுதலாக இருந்தாரே தவிர மறுமலர்ச்சியின் நேரடித் தந்தையாக இயங்கவில்லை. தனித்தமிழ் ஊழி தாண்டி மறுமலர்ச்சி ஊழியிலும் அவர் வாழ்ந்தார். வாழ்ந்து மறுமலர்ச்சிக்குத் தூண்டுதல் தந்தார். மறுமலர்ச்சிக்கு வாழ்த்துரைத்து, அதன் வளர்ச்சி கண்டு தம் "நைந்த" உள்ளத்திலும் உள்ளூர மகிழ்ம் அறிவார்ந்த தலைவராக மட்டுமே அவர் இயங்கினர்.

ஆர்வக் கவிஞர்

தனித்தமிழ் ஊழிக்கு முற்பட்டே மறுமலர்ச்சி ஆர்வம் கொண்ட கவிஞர் பாரதி. மற்ற ஏடுகளின் பெருமையைப் போலவே. சிலம்பின் பெருமையை அவர் அறிந்து சுவைத்திருந்தார் என்பதை அவர் பாடல்கள் காட்டுகின்றன. 'யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல, வள்ளுவன்போல், இளங்கோவைப்போல பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ் நாடு' என்ற தொடர்கள் இதை மெய்ப்பிக்கின்றன. சிலப்பதிகாரம் வெளி வந்தும் அதன் தேனினும் இனிய தீஞ்சுவைப் பண்ணைத் தமிழகம் கேளாத அந்த நாளிலேயே, அவர் அதைக் கேட்டார், ஈடுபட்டார் என்பதை நாம் காண்கிறோம். அதன் ஆற்றலை அவர், கம்பர், வள்ளுவர் ஆகிய இருவர் செவ்விகளுடன் இணைத்துக் கண்டார். இது காலங் கடந்த உணர்வு, கவிஞனின் வருங் கால கனவுணர்வு எனபதில் ஐயமில்லை. ஆயினும் பாரதியார் பாடலில் இப்பண்பைத் தமிழர் கண்டு நுகர்வது இன்றுதான்--நம் மறுமலர்ச்சிக் காலத்தில்தான்--பாரதியார் காலத்தில் அது வெறும் உபசாரப் புகழ்ச்சியாக மட்டுமே அமைந்திருந்தது.

அத்துடன் சிலப்பதிகாரத்தைப் புகழ்ந்த கவிஞர் அதன் கதையை--சொற்களை--பண்புகளை எடுத்தாளவில்லை. புகழ்ச்சி வெறும் புகழ்ச்சியாகவே நின்றது. அவர் ஈடுபட்ட கதை, அவர் கவிதைக்குத் தூண்டுதல் தந்த காவியப் பின்னணி சிலம்புக் கதையோ தமிழகப் பின்னணியோ அன்று. இராமன் கதை, கண்ணன் கதை முதலிய பிறநாட்டுக் கதைகள், பிறநாட்டுப் பின்னணிகளிலேயே அவர் முழு ஈடுபாடு கண்டார்.

இராமாயண பாரத ஆராய்ச்சி

மறைமலை அடிகளின் தனித்தமிழ்க் கண்ணோட்டத்தையும் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தையும் இராமாயண பாரதங்களின்மீது பரவி ஓடவிட்ட பெருந் தலைவர்கள் நாவலர் பெருந்தகை சோமசுந்தர பாரதியாரும் சொற்செல்வர் இரா. பி. சேதுப் பிள்ளையுமே ஆவர். கம்பரும் வில்லிப்புத்தூராரும் வடவர் கதைகளின் பின்னணியாகத் தரும் தமிழ்ப் பலகணிகளைத் திறந்து வைத்து, அதன் மூலமாக அவர்கள் அந்நூல்களின் சிறைக் கூட்டத்துக்குள்ளேயே தமிழ்த் தென்றலைப் பாயவிட்டு, தமிழ் வாழ்வையும் அறிவையும் வளர்த்தார்கள். நாவலரின் நுண்ணறிவுடன் சொற்செல்வரின் கலைநயம் இழைந்து சிலப்பதிகாரத் தமிழுக்கு ஏணி வைத்தது.

சிலப்பதிகாரத்தின் இரண்டாம் பதிப்பு முதல் நாட்டில் எழுந்து வந்த புத்துணர்ச்சியைப் பயன் படுத்தி இரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் 'சிலம்புச் செல்வம்' என்ற கலையாராய்ச்சி நூல் சிலப்பதிகாரத்தின் காலம், சிறப்பு, பண்புகள் ஆகியவற்றில் தமிழ்ப் புலவர் உள்ளங்களையும் தமிழ் இளைஞர் நங்கையர்களின் கவனத்தையும் திருப்பிற்று. அத்துடன் சிலப்பதிகார வகுப்புக்கள், இளங்கோ மன்றங்கள் அன்றிருந்து இன்றுவரை பெருக்கமடைந்து வருகின்றன.

கம்பராமாயணமும் சிந்தாமணியும்

கம்பராமாயணத்தில் ஈடுபட்டவர்களுக்குச் சீவகசிந்தாமணியின் சுவை எவ்வளவு புதிதோ, அவ்வளவு சுவை இரண்டிலும் ஈடுபட்டவர்களுக்குப் பெருங்கதையும் சிலம்பும் புத்தம் புதிதாகத் தோற்றமளிக்க வல்லன.

கம்பரிடம் சொற்சுவை காணலாம். பொருட்சுவை காணலாம். ஆனல் இரண்டும் பாமர மக்களிடமிருந்து தொலைவானவை. புலவர் விளக்க விளங்குபவை அவை--அதுவும் புலவர்களுக்கே விளங்கிய பின்பும் அவை கவிஞர் திறம், விளக்கும் ஆசிரியப்புலவர் திறம் ஆகியவற்றைக் காட்டுபவையாக அமையுமே அல்லாமல், இயற்கையோடு இயைந்த கலை இன்பம் பயப்பவை ஆகமாட்டா. கலைத்துறையில் ஒரு சிறந்த வழக்குரைஞர் ஆகவும் சுவையுணர்வாளராகவும் விளங்கிய ஒரு டி. கே. சிதம்பரனர் தம் வாழ்நாள் முழுவதையும் மக்கள் உள்ளத்தைக் கம்பநாடகத்தில் ஈடுபடுத்துவிப்பதில் செலவிட்டபினனும், அது பொதுமக்கள் உள்ளத்தில் உலவ மறுத்தே வருகிறது என்பது கண்கூடு. கம்பர் விழாக்கள், கம்பர் கழகங்களால் இந்நிலையை மாற்றி அமைக்கக் கூடவில்லை. கலைப்பண்பு மேதை டி. கே. சி., இரா. பி. சே. ஆகியவர்கள் நீங்கலாக கம்பநாடகப் பண்பு கண்ட தமிழர் கம்பர் கழகங்களில் இல்லாதிருப்பது இந்நிலைக்குரிய காரணங்களில் ஒன்று எனலாம். அத்துடன் தனிப்பாடற் சுவையன்றி, கோப்பாக நூற்சுவை கம்பராமாயணத்தில் அமையாதிருப்பது மற்றுமொரு தனிக் காரணமாகும்.

சிந்தாமணி, கம்பராமாயணத்தைவிட எளிதாகக் கேட்பவர்களைக் கேட்கும்போதே இயக்கவல்லது. அதன் சொற்சுவை கம்பரைமட்டு மன்றி எம்மொழிப் புலவரையும் தாண்டிச் செவிவழி சென்று சித்தத்தை மயக்கி இயக்கும் ஆற்றல் வாய்ந்தது. ஆனல் அந்நூலின் சொற்சுவை எளிது; பொருட்சுவை ஆழமானது. தித்திப்புப் பூச்சினுள் செறிந்த வைரத்துண்டங்கள் சிந்தாமணிப் பாடல்கள். பத்தாம் நூற்ருண்டில் தமிழகத்தில் அதற்கிருந்த செல்வாக்கைக் கண்டு தனித் தனி புழுக்கமுற்ற பல குழுவினர் அப்புழுக்கத்தின் பயனுகவே கம்பராமாயணமும் பெரிய புராணமும் தோற்றுவித்தனர் என்பதையும், அவற்றுலும் முழு வெற்றி காணமல் பின்னும் கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றில் ஈடுபட்டு போட்டியை வளர்த்தனர் என்பதையும் இன்று நாம் எளிதில் உணர முடிகிறது. இறுதியில் அவர்கள் போட்டியில் வென்றுள்ளனர் -- ஆனல் அது

வெளிவந்துவிட்டன !

அறிவூட்டும் புது நூல்கள் !

கண்ணதாசன் எழுதிய

பெரும்பயணம்	ரூ.	1 0
கண்மணி - தென்னரசு		1 0
புதுமைப் பெண் - 'ஜீவா'		1 12
சிப்பாய் முரளி - சிறுவர் கதை		0 4

கண்ணதாசன் எழுதிய

ஈழத்து ராணி	1 0
இலக்கியத்தில் காதல் - காரை முத்துப்புலவர்	1 4
கூட்டுக்குரல்	1 0

முன்பணம் அனுப்பியோ, வி. பி. மூலமோ பெற்றுக் கொள்ளவும். வியாபாரிகள் கழிவு 25 சத விகிதம்.

அருணோதயம்

சென்னை-14.

கலைப்போட்டியில் அல்ல, சமயப் போட்டியிலேயே. சிந்தாமணி மக்க ளிடையே வழங்காமல், புலவர் களிடையே கூட அருங்கலச் சிந்தா மணியாய் இருப்பதனுலேயே, கம்ப ராமாயணமும் பெரியபுராணமும் 'கேள்வி' அளவிலாவது தனிப் பெரு நூல்களாக இயங்குகின்றன.

பெருங்கதை - பேய்மொழி மூலநூல் - 'ஆதி கவி'கள்

கம்பராமாயணத்துடனே, சிந்தா மணியுடனே நேரடியாகப் போட்டி இடவல்ல நூலல்ல பெருங்கதை. ஆயினும் அவ்வேடுகளில் காண முடியாத பல அரும் பண்புகளின் சேமகலமாய் அது அமைகின்றது. அன்றியும் அந்நூல்களிலிருந்து சிலம்புச் செல்வத்துக்கு ஏறிச் செல் வதற்கான ஒரு படியாகவும் அது அமைந்துள்ளது.

தமிழகத்திலும் சரி, தமிழகத் துக்கப்பால் பரந்த கீழை நாடுகளி லும் உலகமுழுவதிலும் சரி, இரா

பன்மொழிப்புலவர்

கா. அப்பாதுரையார்

மாயண பாரதங்கள் செல்வாக்குப் பெறுவதற்கு முன்பே, முதற் பெரும் செல்வாக்கும் மக்கட் பெரும் புகழும் உடைய நூல் பெருங்கதை யே ஆகும். இது தமிழிலும் சமஸ் கிருதத்திலும் உலக மொழிகள் பல வற்றிலும் அக்காலத்திலேயே மொழிபெயர்த்தும் தழுவப்பட்டும் பரவிய ஒரு மாபெரிய 'தாய் மொழிக் காவியமா'கும்.

பெருங்கதை தொடக்கத்தில் எந்த மொழியில் எழுதப்பட்ட தென்பதே நமக்குத் தெரிய வர வில்லை--முதனூல் மட்டுமன்றி அதன் மொழியும் இன்று தடமற்று அழிந்துபோய் விட்டது. ஆனுல் முதனூலாசிரியர் 'குணட்டியர்' என்ற பண்டைப் பெரும் புலவர். அவர் எழுதிய மொழி ஆரிய அறி ஞர் மரபில் 'பேய்மொழி' அல்லது 'பிசாசு மொழி' எனப்படுகிறது. என்று சமஸ்கிருதவாணர் வால்மீகி யை 'ஆதிகவி' என்று கூறுவது போல, வால்மீகி காலத்திலும் அதற்கு முன்னும் இந்தக் 'குணட் டியரே' 'ஆதிகவி' என்ற அரும் புகழ் உடையவராய் இருந்தார். பக வத் கீதையில் 'கவிஞரிடையே நான் உஷனகவி' (கவீநாம் உஷநாகவி:) என்ற முறையில் புகழப்பட்ட உலக முதற் கவிஞர் இவரே யாவர்.

குணட்டியர் நூலின் ஒரு பகுதி தழுவிய தமிழாக்கமே கொங்கு வேளிர் இயற்றிய தமிழ்ப் பெருங் கதை. சமஸ்கிருதத்திலும் இது போல பிருகத் கதா, பிருகத் கதா மஞ்சரி, கதா சரித் சாகரம் முதலிய பெயர்களால் பல அரைகுறை மொழிபெயர்ப்புத் தழுவல்களும் திரிதல்களும் எழுந்துள்ளன.

சேக்கிழார் நூல் 'பெரிய புரா ணம்' என்று பெயர் பெற்றுள்ளது. கம்பர் தம் காவியத்தை 'மாக்கதை' என்றே குறிப்பிடுகிரு்ர். பாரதம் 'மகாபாரத'மென வழங்கப்படு கிறது. இப்பெயர்கள் 'பெருங்கதை' யின் மரபில் வந்த பெயர்கள். பெருங்கதையின் புகழுடன் போட்டி இட்டு அதைத் தனதாக்கும் முயற்சி யில் எழுந்த பெயர்களே இவைகள்.

(தொடரும்)

இரு சகோதரிகள்...

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

விட்டபோதும், மூத்த அத்தானை என்னுல் மறக்கமுடிய வில்லை அக்கா! அந்தப் பொல்லாத உத கை என்னை துளசிங்கரின் ஆசைப் பெட்டகமாக்கி விட்டதே அக்கா! மன்னிக்க மாட்டாயா!" என்று எழுதி வைத்துவிட்டு தன் அறைக் குள் போய் கதவை மூடிவிட்டாள். ஆனுல் அதே அறைக்குள் தன் அக் காவின் கடிதம் சிரித்துக்கொண்டி ருந்ததைமறுநாள்தான் அவளால் பார்க்க முடிந்தது.

"அபை ஊர்மிளா, நீ உதகை சென்ற நேரத்தில் தீர்த்தபதி வந் தார். அவர் உனக்கே உரிமைப் பட்டவர் என்பதை நானறிவேன். என்செய்வேன். கண்ணே, ஆண்ட வனின் துணைவிகளால் கூட அடக்கமுடியாத ஆசையை சாதா ரண பெண்ணுகிய என்னுல் அடக்க முடியுமா ஊர்மிளா? வெளிநாடு சென்றுவந்த உன் கணவர் என் னைக் கெஞ்சினர்; பின் கொஞ்சி னர்; இறுதியில் பஞ்சணைக் கிளி யாகவே ஆக்கிவிட்டார். உன் கன் னத்தை புண்ணுக்கவேண்டிய அன் னவரின் பற்கள் என் கன்னத் தைப் புண்ணுக்கி விட்டன. மன னித்துவிட மாட்டாயா?" என்று எழுதப்பட்டிருந்த வாசகம் ஊர் மிளாவின் கண்களை நீருற்ருக்கி விட்டாலும் அந்த நீர்த்துளிகள், தன்னுடைய கணவனை அக்கா அப கரித்துக் கொண்டாளே என்பதின் துயரக்குறியா, அல்லது அக்கா, அவளுடைய கணவனை தனக்கு மனப்பூர்வமாக தந்து விட்டாள் என்பதின் ஆனந்தக் குறியா, என்ப தை யாரால் புரிந்துகொள்ள முடி யும்?

இப்போதும் அந்தக் குடும்பம் ஒற்றுமையாகத்தா னிருக்கிறது. ஊரறிய மீனலோசனிக்கும்-துள சிங்கத்திற்கும், ஊர்மிளாவுக்கும் தீர்த்தபதிக்கும் தான் திருமணங் கள் நடைபெற்றன. ஆனுல் இப் போது அப்படியல்ல; துளசிங்கத் தின், வாசமுள்ள பொன்மலர் ஊர்மிளாதான், தீர்த்தபதியின் கொஞ்சும் புரு மீனலோசனிதான். தீர்த்தபதிக்கு மாலையிட்டு அம்மி மிதித்தது ஊர்மிளா, துளசிங்கம் கைபிடித்து அருந்ததி பார்த்தது மீனலோசனி. ஆனுல் இப்போது அந்த ஜமீன் மாளிகையில் எப்படித் தெரியுமா? நால்வரும் ஒன்ருக உட்கார்ந்துதான் சாப்பிடுவார்கள். தங்கை அக்காவிடம் சொல்லிக் கொண்டும், அக்கா, தங்கையிடம் விடைபெற்றுக் கொண்டும் மன ஒப்புதலோடு படுக்கையறையை மாற்றிக்கொள்கிருர்கள். வடிவேல ருக்கு இது தெரியும்; வெளிமிளுள் ளோர் பலருக்கும் தெரியும்!

மோட்டாரிலே பவனி வரும்போது வேறுபாட்டை யாரும் காணமுடி யாது. ஆனுல் மாளிகைக்குள் மோட்டார் நுழைந்து விட்டால் மீன லோசனி தீர்த்தபதியைத் தான் பற்றுவாள்; ஊர்மிளா துளசிங்கத் தைத்தான் கொஞ்சுவாள். பத்தி ரம் ஒருவர் பெயருக்கு, பாத்தியதை இன்னொருவருக்கு என்ற நிலையி லிருக்கிறது அந்த 'ஜோடி'களின் வாழ்க்கைப் பாதை!

★

மனைவியை மாற்றிக் கொண்ட அந்த விசித்திர வாலிபர்கள் இன் றும் ஒரேநெருப்புக் குச்சியில்தான் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொள் கிருர்கள். அவர்களுக்கு குழந்தை களுமுண்டு.

★

இந்தக் கதையை என் நண்பர் வாயிலாக நான் கேள்விப்பட்ட போது, அவர 'இது உண்மைக் கதை; எங்கள் வட்டாரத்திலே ஒரு 'ஜமீன்' இப்படித்தான் இன்னும் இருக்கிறது" என்ருர்.

கூத்து...

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

மும் கலைக்கப்படவில்லை. மக்கள் புத்தறிவு பெற்றிடும் வரையில் 'பாபாத்மா'க்கள் 'புண்யாத்மா'க் கள் ரூபத்தில் கோலோச்சிக் கொண்டும் கொட்டமடித்துக் கொண்டும் இருப்பார்கள். பெர் ஹாம்பூர் நிகழ்ச்சி வெறுங்கூத்து-அரசியல் தமாஷா-உண்மைக் கலப் பில்லா நடிப்பு என்பதை மக்கள் உணரும் காலம் வரும். அக்காலம் வருவதற்குள் மேலும் சில பெர் ஹாம்பூர் கூத்துக்கள் அ. இ. காங் கிரஸ் கமிட்டியின் கூட்டங்கள் என்ற பெயரால்நடைபெற்றுவரும்.

கூத்திலேஎதிர்பாராத சுவாரஸ்ய மான கட்டம் மது பற்றியது. பெர் ஹாம்பூரில் அ. இ. கா. க. கூட்ட நாட்களில் எந்த விதமான மது வகைகளும் விற்கக்கூடாது என தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தாம். காங்கிரஸ் கூட்டத்திற்கு-அதாவது கூத்திற்கு - வந்திருந்த பிரமுகர்கள் நிகழ்ச்சி முடிந்து தத்தமது இருப்பிடங்களுக்குச் சென்ற பிறகு மதுவிலக்கு விலக்கி விடப்பட்டிருக்கவேண்டும். இதைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தோன்றவில்லை. கட்டிய கணவன் தன்னுடையமனைவி, தான் வீட்டிலி ருக்கின்ற சமயங்களில் மட்டும் வேறெவ்வாடவரையும் கண்ணெடுத் துப் பார்க்காமலிருந்தால் போதும் தான் வெளியூர் சென்றதும் 'ஐவருக்கும் தேவி - அழியாப்பத் தினி' நாடகம் நடத்தினுல் தவ றேதும் புரிந்தவளாக மாட்டா ளென்று எந்த நேரத்திலேனும் சொல்வானு? அதைச் சொல்லாமற் செய்து காட்டியிருக்கின்றனர். அ. இ. கா. க. எனும் கணவன் சார்பில் பெர்ஹாம்பூர் மதுவிலக்கு அதிகாரிகள்!

அறிவிப்பு

அன்புடையீர்!

நாளதுவரை சேலத்தில் நடைபெற்றுவந்த 'நீலா நிலையம்' 15-5-55 முதல் 2-127 மவுண்ட் ரோட், சென்னை-6 என்ற முக வரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள் கிருேம். வணக்கம்.

Mg. Partner ஜி. நாகராஜன், Prop. பி. பி. பத்மநாபன்.

விற்பனையாகிறது

முடிசாய்ந்தது ரூ. 1 4 0
(சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத்)

முசோலினி ரூ. 0 10 0
(வி. சிவப்பிரகாசம், பி.ஏ.)

ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி அச்சில்
(கண்ணதாசன்)

விபரங்களுக்கு:

நீலா நிலையம்
2-127, மவுண்ட் ரோட்,
சென்னை-6.

புதிய ஏஜண்டுகள் தேவை!

"தமிழன்"

(கலை, இலக்கிய மாத இதழ்)
ஆசிரியர்: R. ராஜாராம்
கௌரவ ஆசிரியர்: மாஜினி

★ தேவைக்கானப் பிரதிகளுக்கு, பிரதி 1க்கு அணு 8 வீதம் முன்பணம் செலுத்தும் புதிய ஏஜண்டுகள் எல்லா ஊர்களுக்கு தேவை.

★ பழைய ஏஜண்டுகள் பாக்கிகளையும், தேவைக்கானப் பிரதிகளுக்குரிய முன்பணத்தையும் செலுத்திப் புதிதாகவே விண்ணப்பிக்க வேண்டும். பாக்கியை செலுத்திப் புதிதாக விண்ணப்பிக்காத ஏஜண்டுகள் விலக்கப் படுவார்கள்.

★ புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்குத்தான் ஏஜண்ஸி கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:
'தமிழன்' அலுவலகம்
20.மேலக்கோபுரத்தெரு. மதுரை

★ வந்தவர் ! வஞ்சகர் ! ★

"இந்துமதத்திற்கென வெள்ளைக்காரர்கள் ஏற்படுத்திய சட்டம் தென்னாட்டுக்கு உகந்ததல்ல; அந்தப் பரங்கியர் பொதுப்படையாகவே சட்டத்தை வகுத்தனரேயன்றி, அந்தந்த மொழியினரின் பழக்க வழக்கத்தை யொட்டியல்ல என்பதை நாம் பன்முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்த சட்டத்தில், நமக்கு ஒத்துவராதவைகளில் பெண்கள் சொத்துரிமையும் ஒன்று. அந்த நாட்களில் தென்னகத்தில் பெண்களுக்கு எத்தகைய உரிமைகள் அளிக்கப்பட்டன என்பதையும், இந்து சட்டத்தையும் ஒப்பிட்டால் நமக்கு வேதனை பிறககத்தான் செய்யும். டில்லி பாராளுமன்றத்தில் பெண்களின் சொத்துரிமை வாதத்தை திடீரென்று ஒலிக்கச்செய்து, பின்பு மங்கிட இடம் தரும் பாராளுமன்றத் தோழர்கள் அறிய, பண்டைய தமிழகத்தில் பெண்களுக்கு தரப்பட்டிருந்த உரிமைகளைப் பற்றி சுருக்கித் தந்திருக்கிறோம்; பொழுது போக்குக்காக அல்ல; பொல்லாத கருநாகம், நமது கலாச்சாரத்தைத் தீண்டிட வருங் காலை துரத்தியடித்திடவே!

"ஆரியர் இத்தேசத்திற்கு வருவதற்குமுன் இத்தேச மாதர்கள் புருஷரினும் இழிந்தோராக எண்ணப்படாமல் புருஷருக்குச் சமமானவர்களாகவே கருதப்பட்டு வந்தனர். மகமதியரின் வருகைக்குமுன் இத்தேச மாதருக்குள் அந்தப்புரமென்னும் கோஷா ஏற்பாடு இருநததில்லை. இம்மாதர் தங்கள் மணவரை இழந்து கைம்பெண்ணுவரேயாயின் அவர்தம் கொழுநதனுக்கு மனைவியாய் வந்தனர். ஆண், பெண்ணுகிய இருபாலருக்குள்ளும் பூர்வகாலத்தில் புணர்விவாகம் புரிந்துகொள்வது வழக்கமாக இருந்தது. இவ்வனுஷ்டானங்களில் மைக்கோளர்; குறவர்; இருளர், சான்றார், பறையர், பள்ளர் முதலிய சாதியாருள் பெரும்பான்மையோர் தவிர சிறுபான்மையரும் மற்றைய சாதியார் அனைவரும் ஆரியரது போதனைகளால் மாதர்களின் மறு விகாகத்தை மட்டும் மறுத்துவிட்டனர். இத்தேசக் கன்னிகைகள் எந்த ஆடவர்மீது அன்பு கொள்ளுவார்களோ அவர்களுக்கே அக்கன்னிகைகளை திருமணம் செய்துகொடுப்பது இத்தேசத்தின் பூர்வீக வழக்கமாக இருந்தது. இதற்கே சுயம்வரம் என்று பெயர். இதற்கு மேற்கோளாக நளன் காதையில் தமயந்தி சுயம்வரத்தை குறிப்பிடலாம். தமயந்தி தனக்குரியவனை, தானே தேர்ந்தெடுத்துக்கொண்டாள் அல்லவா?

இஃதன்றி லீலாவதி, ஔவையார், காரைக்காலம்மை, பாண்டியன் மனைவி, உப்பை முதலிய பெண்மணிகள் கல்வியில் நன்கு பயின்றவர்களாக இருந்தனர். முற்காலத்தில் மாதர்களும் ஆண்களைப்போலவே மாநிலத்தை கட்டியாண்டுள்ளனர், மலையாளத்தில் அரசுரிமை பெண்பாலர்க்கே. "அம்மான் சொத்திற்கு மருமகள் கர்த்தா" என்ற பழமொழி இன்றளவும் நிலவி வருவதைக் காணலாம். ஆரியர் இத்தேசத்திற்கு வருமுன், இந்நாட்டில் பெற்றோர் சொத்துக்கள் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் சமமாக பகிர்ந்து கொடுக்கும் பண்பு இருந்தது. இவற்றால் ஆரியர் இந்நாட்டில் அடியெடுத்து வைக்குமுன் இந்நாட்டின் மங்கையர் திலகங்கள் மாநிலத்தை கட்டியாளும் உரிமை பெற்றிருந்தனர் என்றும் ஆரியர் வருகைக்குப் பிறகு உரிமையாவுமிழந்து ஆண்களினும் இழிவுடையவரென்றும், விதவையாக நேரிட்டால் மறுமணம் கூடாதென்றும், உடன் கட்டை ஏறவேண்டும் என்றும் ஆரியர்கள் ஏற்படுத்தி, பெண் குலத்தவரை புண்குலத்தவராக—அடிமைப் பிறவிகளாக மாற்றினர். இழிவும் பழியும் வந்துற்றகாரணத்தால் பெண்குலம் பெருமை குன்றி சிறுமை யெய்தியது.

ஆங்கிலேயர் நூலொன்றில் இந்நாட்டின் பூர்வீக நாணயங்களுள் அநேக நாணயங்களின் விவரமும் அந்நாணயங்களில் அமைந்துள்ள படங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அந்நாணயக்காசுகளில் வீரப் பெண்மணிகளின் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்நாட்டுப் பெண்மணிகள் ஆடவரைப் போன்று வீரதீரத்தில் சிறந்து விளங்கினர் என்பதை அறியலாமன்றோ?

திராவிடர்களின் நூல்களுள் சிலவற்றிலேனும் ஆரிய மதமானஇந்து மதத்தையோ, அவர்களைப் பற்றியோ பழித்தும் இழித்தும் உரைக்கப்படவில்லை. ஆனால் ஆரியர்களின் வேதாகமங்களில் திராவிடர்களை இழித்துக் கூறப்பட்டிருக்கிறது. திராவிடர்கள் தொலைந்து போகவேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனால் திராவிட நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் ஆரியர்கள் இந்நாட்டில் இருந்ததே இல்லை என்றும், அவர்கள் இந்நாட்டிற்கு வருமுன் இந்நாட்டு திராவிடர்கள் நாகரீகத்தில் மேம்பாடு அடைந்திருந்தனர் என்றும்தெரியவருகிறது.

இந்நாட்டிலுள்ள கட்டிடக்கலையானது பண்டைய திராவிட நாகரீகத்தின் அடிப்படையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது டியூரேனிய முறைப்படியாகும். ஆரியர்கள் வருகைக்குப் பிறகு அவர்கள் முறைப்படி புது முறையில் கட்டடக் கலையை போற்றவில்லையென்றும் பெர்கூசன் எனனும் சிற்பக்கலைஞர் கூறுகிறார். இந்நாட்டு வியாபாரப் பொருள்கள் ஐரோப்பாகண்டத்தில் மிகச் சிறப்பாக மதிக்கப்பட்டு வந்தன. மிளகு பலதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இக்காரணத்தால் நாகரீகமடைந்திருந்தனரென்று ஐரோப்பா முதலான கண்டத்தவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் திருமணம்

◉

'முரசொலி' ஓவியர் தோழர் சி. வி. இராசன் அவர்களுக்கும் தோழியர் தனலெட்சுமி அவர்களுக்கும் தோழர் சேலம் ஏ. சித்தையன் தலைமையில் (நெ 1 புதுத்தெரு, சேலம்டவுன்) 2-6-55 வியாழன் காலை 8-30 மணியளவில் தமிழ்த் திருமணம் நடைபெறும். நண்பர் பலர் மணமக்களை பாராட்டிப் பேசுவர்.

அபாயமாமே, அபாயம்!

தென்னிந்தியாவின் மானம் பறிபோகிற வேளைகளிலெல்லாம், உரிமை அபகரிக்கப்பட்ட நேரங்களிலெல்லாம், தலைநகர் வாசிகள் என்ற காரணத்தைக் காட்டி நமது ஆசை அணைக்கப்பட்டபோதெல்லாம், கண்மூடி "தவஞானி"யாக இருந்தவர்கள், "கிடக்கிறார்கள்" என்று கேலி பேசியவர்கள், "வேலையற்றவர்கள்" என்று இத்துரைத்தவர்கள், இப்போது நம்மையே கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். நமது செயல்களையே கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் நமது நடவடிக்கைகளையே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. நமது மேடைகளையே துச்சமெனக் கருதிய அதே கூட்டத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள்கூட இன்று, ஒலிபெருக்கி இணைக்கும் முன்பாக வந்து காத்துக்கிடக்கிறார்கள். காரணம், நமது கருத்தை அவர்கள் அப்படியே ஒத்துக்கொண்டார்கள் என்பதல்ல பொருள்; நமக்குப் பின்னே மக்கள் சக்தி திரண்டு இருக்கிறது என்பதை அறிந்துதான், நமது சொல்லை அந்த சக்தி செயலாற்ற முனைந்துவிடுகிறது என்று அஞ்சித்தான், தங்களை 'இரட்சணநிற' பிராணிகளாக்கிக் கொள்கிறார்கள்.

இன்னும் சிலருண்டு; தங்களுக்கு ஆபத்து வந்த நேரத்தில் நம்மோடு சேர்ந்து குரல் கிளப்புவார்கள். "இதே பிரச்னை முன்பு வந்ததே! அப்போது நாம் கலந்துகொள்ளவில்லையே" என்றுகூட அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. காரணம் "ஆசை வெட்கமறியாது," "ஆபத்துக்கு தீட்டில்லை" என்று ஆத்மசாந்தி செய்துகொள்ளும் வர்க்கத்தினர் அவர்கள். இந்த வகையில் சுதேசமித்திரன் இதழை நீங்கள் எதில் சேர்த்துக்கொண்டாலும் தவறில்லை.

தமிழ்நாட்டு ரேடியோ நிலையங்களில் தமிழ்மொழி அலட்சியப்படுத்தப்படுகிறது; தாய்மொழிக்கு அங்கே கௌரவம் தரப்படுவதில்லை; அப்பளம் செய்யும் விதத்தையும், அல்வா செய்யும் முறைகளையும் தமிழ்நாடகமாக தீட்டிக் காட்டுவது சிரிப்பூட்டுவனவாக இருக்கிறது; சர்க்கார் தமிழ்நாட்டு ரேடியோ நிலையங்களில் தமிழுக்கு கௌரவம் தரப்படவேண்டு" என்று நாம் கண்டனக் கணைகள் தொடுத்த நேரத்திலெல்லாம் அலட்சிய நோக்கோடு அகில இந்திய பண விவகாரங்களில் தலையிட்டு தன்னையொரு "தலை"யாக்கிக்கொள்ள முயற்சித்த 'சுதேசமித்திரன்'கள், "தமிழ்நாட்டு ரேடியோ நியங்களிலே குறளுக்கு நல்ல மதிப்பு தருவதில்லை; பாரத உபன்யாசங்களும், ராமாயண கலா நிகழ்ச்சிகளும் இப்போது தேவையில்லை" என்று நாம் நமது வேதனைகுரலை அனல் மூச்சோடு சேர்த்து கக்கிக்கொண்டிருந்த நேரத்தில், பிறவிச் செவிடாக இருந்த 'சுதேசமித்திரன்'கள், இன்று "தென்னிந்தியா! தென்னிந்திய சங்கீதம்" என்று அலறித் துடிக்கிறது. சென்னை ரேடியோ நிலையத்தில் தென்னிந்திய சங்கீதம் தெரிந்தவர்கள் இல்லாததால் தென்னிந்திய சங்கீதமே அழியப்போகிறதே என்று கண்ணீர் வடிக்கிறது.

சென்னை, மே 24 சுதேசமித்திரன் இதழில் 'அன்பர் தபால்' என்ற தலைப்பின்கீழ் ஒரு கடிதம் பிரசுரமாகி இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தபோது நம் இதயத்திலே மகிழ்ச்சியும் எண்ணத்திலே வினுக்குறியும் அரும்பு விடுகின்றன. சுதேசமித்திரனுக்கு தமிழின்பால் உண்மையான பற்று வளர்ந்திருக்கிறதா? அல்லது, பிடில் வித்வான் பாரூர் ஏ. சுந்தரமய்யருக்காக அந்தக் கடிதம் பிரசுரமாயிருக்கிறதா என்றே புரியவில்லை. அவ்வளவு கடுமையான கடிதத்தை மித்திரன் இதழ் ஏந்தி வந்திருக்கிறது. வரவேற்கத்தக்கது தான். இதோ கடிதத்தைப் படியுங்கள்! எண்ணிப்பாருங்கள்.

"சென்னை ரேடியோவில் பாடுவதாயிருந்தால்அல்லது வாத்தியம் வாசிப்பதாயிருந்தால் ஒரு பானல் ஒரு குழுவின் பரீட்சைக்கு உட்பட வேண்டும். இந்த குழுவில் சங்கீத ஞானம் உள்ளவர்களைவிட இல்லாதவர்கள்தான் அதிகம்.

சுருதி சுத்தமாகவும், லயசுத்தமாகவும் பாடுகிறவர்களும் வாத்யம் வாசிப்பவர்களும் இந்தக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவது துர்லபம். இதனால் கூடிய சீக்கிரம் தென்னிந்திய சங்கீதம் அநேகமாக நிலை குலைந்து போய்விடலாமென்று தோன்றுகிறது.

ஆகவே, இத்தகைய ஒரு பானல் இருப்பதைவிட இல்லாதிருப்பதே மேல்.

சென்னை,

பாரூர் ஏ. சுந்தரமய்யர்

பிடில் வித்வான்

இந்தப் பற்று வளர்ந்தால் மகிழ்வோம். இல்லை ஆபத்து வேளையில் முளைத்த 'திடீர் பற்று' [illegible]தான் சொல்ல முடியும் நம்மால்."

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ.எல்.டி.

பதில் தருகிறார்

வெற்றிவேலு, சுந்தராபுரம்.

உணலினும் உண்டது அறல்
இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது
—குறள் (1326)

உண்பதிலும் முன் உண்ட உணவு செரித்தல் சிறந்தது என்ற இம் மேற்கோள் காட்டி வள்ளுவர் 50 வயதுக்கு மேல்தான் இக்குறள் இயற்றியிருக்கவேண்டும், ஏனெனில் உணவு செரித்தல் என்பது ஒரு மனிதனுக்கு அவ்வயதுக்குமேல் தான் தெரியும்! குறள் வள்ளுவரால் பல ஆண்டுக்காலம் தீட்டப் பட்டது என்று அ. கி. பரந்தாமனார் எம். ஏ. கோவையில் சமீபத்தில் குறிப்பிட்டார். இதுபற்றிற்கு ஆதாரம் காட்டியது சரியா? தவறா?

உணவின் சுவை பசியில் மிக்குத் தோன்றும். அதுபோலவே கூடலின் இன்பம் ஊடலால் பெருக்க முற்று நிலைபேறு உடையதாகும். இது இக்குறட்பாவின் கருத்து.

''மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்''

என்ற குறட்பா உவமையை நேரடியாகக் குறிக்கிறது. திருவள்ளுவர் போன்ற அனுபவ அறிஞர் இவ்வுண்மையைக்காண ஐம்பதுஆண்டு வாழ்ந்துதான் ஆகவேண்டும் என்று கூறுவதற்கில்லை. அங்ஙனம் கூறுபவர் கூற்று சமத்காரமான ஒரு மிகையுரை மட்டுமே. ஆனால் குற்றமல்ல. வள்ளுவர் போன்ற அறிஞர் முற்றிலும் தம் நேரடி அனுபவத்தையே கூறவேண்டுமென்பதில்லை: அறிஞராவார், தொலை அனுபவங்களையும் பிறர் அனுபவங்களையும் மற்றவர் காட்சித் திறம் தாண்டி நுணுகி அறிபவரே ஆவார்.

கே. ஆர். வாதராசன்,
ஓ. கோண்டலம்பட்டி

பண்பு என்றால் என்ன?
நாகரிகமென்றால் என்ன?

நாகரிகம் என்பது ஒரு நாட்டின் உலகின் ஒரு காலத்திய (உயர்வையும் விரிவை குறிக்கும். அதில் மக்களின் வாழ்க்கைத் துறையிலும் முன்னேற்றங்கள் அடங்கும். பண்பாடு தொன்று தொன்றும் நிலையாக வரும் நாகரிக அடிப்படைக் குறிக்கும். பண்பு ...ன் பண்பாட்டின் ...ரிதரிடம் இயல்பண்பும் அக வளர்ச்சியைக் குறிப்பது.

நாகரீகம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் பரவவல்லது. பண்பாடு, பண்பு, அங்ஙனம் எளிதில் பரவமுடியாது. ஏனென்றால் அது உள்வளர்ச்சி.

கல்வியின் நோக்கம் அறிவு என்று முந்நாளில் கருதப்பட்டது. சிந்தனை என்று இதனைப் பகுத்தறிவாளர் திருத்தி உள்ளனர். ஆனால் இவ்விரண்டினும் மேற்பட்டது பண்பு. அது படித்து வருவதல்ல, பழகி வருவது. முயற்சி இல்லாமலே முன்னேற்றத்துக்கும், சமுதாய வாழ்வுக்கும் உரிய பண்புகளைப் படிய வைப்பதே கல்வியின் நோக்கமாகத் தலைசிறந்த அறிஞர்களால் கொள்ளப்படுகிறது.

இனப்பண்பு நாட்டுப்பண்புகளின் தொகுதியேபண்பாடு. பண்பாட்டின் வளர்ச்சியை நாகரிகமாக மற்ற நாட்டார் காண்கின்றனர்.

ப. கிருட்டிணமூர்த்தி,
பேரம்பூர், சென்னை.

(அ) நல்லாறு எனினும் கொளல்
தீது; மேலும்
இல்லெனினும் ஈதலே நன்று

இக்குறளுக்குக் கருத்துக்கூறி, விளக்கம் தருக.

(ஆ) பஸ், பல்ப், அல்ஜீப்ரா' ஜியோமிதி முதலியவற்றிற்குரிய தமிழ்ச் சொற்கள் கூறவேண்டுகிறேன்.

(அ) கொடுப்பது எப்போதும் நல்லது என்ற கொள்கையை குறிக்கோள் நிலையில் வற்புறுத்துகிறது இந்தக் குறட்பா.

நல்வழியில் வருவதானாலும்கூட பிறரிடம் இருந்து ஒன்றை இலவசமாகப் பெறுதல் நல்லதல்ல! கொடுப்பதே நல்லது. சமயவாதிகள் கொடுப்பதை வலியுறுத்துவதற்காக, கொடுப்பவர் மேலுலக இன்பம் பெறுவர் என்று கூறுகின்றனர். ஆனால் அந்தப் பரிசு இருந்தாலும் இல்லாவிட்டாலும் கொடுத்தல் என்ற செயல் தன் செயலளவிலேயே சிறந்த நற்குறிக்கோளாகும். இது குறட்பாவின் கருத்து.

திருவள்ளுவரின் ஒழுக்கம் தனி மனிதருடைய தன்னலம் சார்ந்த வாணிக ஒழுக்கமன்று. அதினினும் குறைபட்ட சமயவாதிகளின் நைப்பாசை ஒழுக்கமும் அன்று. உலக நலம், நிலையான உலக நலத்தைக் குறியாகக் கொண்ட பண்பு ஆகியவற்றின் மீதே அவர் ஒழுக்கக் கோட்பாடு அமைந்துள்ளது. தமிழ் நாட்டில் உள்ள பிற்காலச் சமயவாதிகள்கூட இக்கருத்தை ஆவலுடன் ஏற்றிருக்கிறார்கள். நரகத்துக்குச் சென்றாலும் கேடில்லை, அப்போதும் பக்தி சிறந்தது என்ற கருத்தை ஆழ்வார்கள் பாடல்கள் தருகின்றன.

(ஆ) பஸ், பல்ப், அல்ஜீபிரா ஜியாமெட்ரி ஆகியவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களாக, வநதூர்தி' ஒளிக்குமிழ், உருக்கணக்கியல், அல்லது மதிக்கணக்கியல், வடிவியல் அல்லது இடக்கணக்கியல் ஆகியவற்றை வழங்கலாம். வேறு தக்க சொற்கள் வரினும் கொள்க

க. செல்வாாசன், பல்வாவாம்.

1 பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய மனோன்மணியம் அவருடைய சொந்தக் கற்பனையா? அல்லது சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டதா? அப்படியானால் எந்த நூற்றாண்டில் நடந்தது? விளக்கம் தருக.

2 திருக்குறளை எத்தனை மொழிகளில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். உலகத்தில் அதிக மொழிகளில் உள்ள நூல் எது?

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய மனோன்மணியம் அவருடைய சிறந்த கற்பனையே. சரித்திரத்தை அடிப்படையாகக்கொண்டதல்ல. மேனாட்டு காவியம் ஒன்றை கருவூலமாகக் கொண்டு தமிழ் நாட்டுப் பின்னணியுடன் புனையப்பட்டுள்ளது. அத்தமிழ்நாட்டுப் பின்னணி பாண்டியர் சேரர் காலத்தை மட்டுமே குறிக்கிறது. அந்த அளவில் மட்டுமே குறிக்கிறது. அந்த அளவில் அதில் வரலாற்றுப் பின்னணி உண்டு. ஆனால் குறிப்பிட்ட ஒரு காலத்தையோ நூற்றாண்டையோ மனதில் கொண்டு ஆசிரியர் கற்பனை செய்ததாகத் தெரியவில்லை. அவர் காலத்தில் தமிழக வரலாற்று ஆராய்ச்சியும் தொடக்க நிலையிலேயே இருந்தது.

2 இருபதுக்கு மேற்பட்டமேனாட்டு கீழ்நாட்டு மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். கிறிஸ்தவர் திருமறை நீங்கலாக அதுவே மிகுதியான மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

பி. காசிநாதன், சேத்துப்பட்டு.

'' ஒருமைக் கண்தான் கற்ற
கல்வி யொருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து ''

என்ற வள்ளுவரின் வாய்மையில் வரும் ''எழுமை'' என்பதற்கு ஏழு பிறப்பு என்று பொருள் கூறுவது பொருந்துமா? அப்படியென்றால் மனிதனுக்கு ஏழு பிறவிகள் உண்டா?

எழுமை ஏழு பிறப்பு என்பவை ஏழுதலை முறையைக் குறிக்கும் ஏழு என்பது இங்கே பன்மைக் குறிப்புமட்டுமே. அத்தகைய நீடித்த வழக்கும் உண்டு. குறிப்பாக ஏழு என்று கொண்டால்கூடப் பெருந் தவறில்லை.

இக்கால அறிவு நூலார் தனி மனிதன் பண்புகள் தாய்தந்தை பண்புக் கூறுகள் அடங்கிய இன அணுக்கள்மூலம்தொடர்ச்சிபெற்று வளர்ச்சி பெறுகின்றன என்று கூறுகிறார்கள். ஒவ்வொரு தலைமுறையிலும் தனி மனிதன் வளர்ச்சி வேறு வேறு! தாய் தந்தையர் இனஅணு இணைப்பு ஆகியவற்றால் தனிமனிதப் பண்பு ஏழு தலைமுறைகளில் கிட்டத்தட்ட முழுவதும் மாறி அமைய இடம் உண்டாகிறது. ஆகவே ஏழு தலைமுறை ஒருவன் தனிப் பண்பு தொடர்கிறது என்பது அறிவு நூல் படியும் பொருத்தமானதே.

தூத்துக்குடிக்கு பொதுச் செயலாளர் வருகை

29-5-55ல் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும். அதுபோது நெல்லை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் மாநாட்டு நிதியும் பொதுச் செயலாளர் அவர்களிடம் தரப்படும். அனைவரும் கலந்துகொள்வதுடன் கிளைகளின் பணத்தை ஈவுப்படி 25-5-55க்குள் நெல்லை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்கும்படி மாவட்டச் செயலாளர் கே. வி. கே சாமி கேட்டுக்கொள்கிறார்.

அடுத்த இதழ்

தென்றலில்

'கதிரன்' எழுதும்

'காவடி'

(அரசியல் கட்டுரை)

படிக்கிறீர்களா?
திராவிட இயக்கத்தின்
அரசியல் கருத்துகளை
சமுதாயக் கொள்கைகளை
பொருளாதாரத் திட்டங்களை
தெளிவாகத் தெளிய
விளக்குகிறான்
தம்பி
ஆசிரியர்
தில்லை வில்லாளன்
வாரந்தோறும் வெளிவருகிறது
தனியிதழ் 2 அணா
விபரங்களுக்கு எழுதுங்கள்
தம்பி அலுவலகம்
சிதம்பரம்